வாராந்த மின்னிதழ்
உண்மையின் முகம்
# கல்முனை NET e paper
kalmunainet.com
தமிழ் மொழியினருக்கான தகவல் தளம்
சார்வரி வருடம் தை ஒன்று (14.01.2021) இதழ் : 01




# கிழக்கில் கொரோனா கோரத்தாண்டவம்!

## அபாயநிலையில் 3 மாவட்டங்கள்: மட்டக்களப்பு 405: கல்முனை 1012: திருமலை 234 : அம்பாறை 77; பலி 11

(நமது நிருபர்)

கிழக்கு மாகாணத்தில் கொரோனா தீநுண்மி என்றுமில்லாதவாறு கோரத் தாண்டவமாட ஆரம்பித்துள்ளது. மக்கள் அச்சத்தில் உறைந்துபோயுள்ளனர். இதனால் முழுக் கிழக்கு மாகாணமும் நிலைகுலைந்து பெரும் ஆபத்தை எதிர்நோக்கியுள்ளது.

கிழக்கில் கொரோனாத்தொற்றுக்களின் எண்ணிக்கை நேற்றையதினம்(13)புதன்கிழமை 1745ஆக அதிகரித்துள்ளது. புத்தாண்டில் கிழக்கு மாகாணத்தில்

02

## வாசகர்களுக்கு இனிய தைப் பொங்கல் நல்வாழ்த்துக்கள்



## புத்தாண்டில் உதயமாகும் வியத்தகுமாற்றம்



அம்பாறைமாவட்டத்தின் கல்முனைபிராந்தியத்தில் கல்முனை நெற் ஊடகவலையமைப்பின் பாரபட்சமற்றநடுநிலையானசேவையானது மிகவும் பாராட்டத்தக்கதாக காணப்படுகின்றது.

02

## கல்முனையில் ஆயிரத்தை தாண்டிய கொரோனாத் தொற்று!

(வேதசகா)

கல்முனை சுகாதாரப் பிராந்தியத்தில் தொற்றுக்களின் எண்ணிக்கை 1000ஐத் தாண்டியுள்ளது. அண்மித்துள்ளது. கல்முனைப்பிராந்தியத்தில் இதுவரை 1012ஆக தொற்றுக்கள் இனங்காணப்பட்டிருக்கின்றன என கல்முனை சுகாதாரப் பிராந்திய சுகாதாரசேவைப்பணிப்பாளர் டாக்டர் குண.சுகுணன் தெரிவித்தார்.

இறுதியாக கல்முனை தெற்கில் 19பேர் தொற்றாளர்களாக இனங்காணப்பட்டதையடுத்து கிழக்கின்

02

## பிள்ளையானுக்கு எதிரான வழக்கு முற்றாக வாபஸ்

நமது நிருபர்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் படுகொலைச் சம்பவத்தில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு சுமார் நான்கரை ஆண்டுகள் விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்து கடந்த 24.11.2020 அன்று பிணையில் விடுதலை செய்யப்பட்டிருந்த மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி தலைவரும் முன்னாள் கிழக்கு மாகாண முதலமைச்சருமான

பிள்ளையான் எனப்படும் சிவனேசத்துரை சந்திரகாந்தன் நேற்று (13)விடுதலை செய்யப்பட்டார்.

## நடுநிலை தவறாத பணியே அவசியம்



கல்முனை நெற் ஊடக வலையமைப்பினால் வெளியிடப்படவுள்ள வாராந்த மின்னிதழின் முதலாவது வெளியீட்டிதழுக்கு இந்த ஆசிச் செய்தியை வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

கல்முனை நெற் இணையத் தளமானது

02

## காலத்தைக் காட்டும் கண்ணாடியாக திகழ வேண்டும்



இன்றைய இணைய உலகம், இவ்வுலகத்தை மட்டுமின்றி இதயங்களையும் எளிதில் இணைத்து விடுகின்றது. நவீன காலத்துக்கேற்ப அனைத்தும் மாறிக் கொண்டே வருகின்றது. இவ்வாறான மாற்றங்களுக்கு ஊடகங்களின் பங்கும் மிக முக்கியமான ஒன்று. இலகுவான முறையில் அனைவர்களுக்கும் இலகுவாய் சென்றடையும் வகையில் உருவாக்கப்படும் இவ் இணையவழிப் பத்திரிகை தனித்துவமிக்க உணர்வை

02

## வடக்கு, கிழக்கில் கனமழை!

நமது நிருபர்

வடக்கு கிழக்கில் தொடர்ச்சியாக மழை பெய்து வருகின்ற நிலையில் பொதுமக்களின் இயல்புநிலை பாதிக்கப்பட்டுள்ளது. அத்துடன் பாரிய அளவிலான விவசாய நிலங்கள் நீரில் மூழ்கியுள்ளதுடன்

02

## உதயமாகும் ஊடகப்புரட்சி



கல்முனைநெற்ஊடகம்கடந்தஐந்துவருடங்களாகஇப்பிரதேசத்தின்செய்திகளைஉடனுக்குடன் வழங்கிவருகின்றது.இதன்பல்வேறுபட்டசமூகப்பணிகளும்ஊடகச்சேவையும்இப்பிரதேசத்திற்குசிறப்பானசேவையாகவே

02

## இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் நிறுத்த வேண்டும்

### ஐ.நா.வதிவிடப்பிரதிநிதியிடம் கஜேந்திரகுமார் வலியுறுத்தல்



(நமது நிருபர்)

தமிழினத்துக்கு எதிராகத் திட்டமிட்டு நிகழ்த்தப்பட்ட இனப்படுகொலை மற்றும் போர்க்குற்றங்கள் தொடர்பில் இலங்கை அரசாங்கத்தின் பொறுப்புக்கூறலை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையுடன் மட்டுப்படுத்தாது அதனை அதற்கு அப்பால் அதாவது சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்குக் கொண்டு செல்ல வேண்டும் என்று

02

## ரூ.1000 அதிகரிப்பில் சுற்றுகிறது பந்து

நமது நிபர்

பெருந்தோட்டத்தொழிலாளர்களுக்கு 1000 ரூபாய் சம்பள அதிகரிப்பு ஜனவரி மாதத்திலிருந்து கிடைக்குமென பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ 2021 ஆம் ஆண்டுக்கான பட்ஜெட் வாசிப்பின் போது அறிவித்திருந்தார்.

02

## முஸ்லிம்கள் இந்த நாட்டின் தேசப்பற்றாளர்கள்

**மாற்றத்துக்கான எழுச்சி முன்னணியின் பிரதான செயற்பாட்டாளர் சிரேஷ்ட சட்டத்தரணி எம்.ஐ.றைசுல் ஹாதி**

(ஷினாஸ் )

சுமார் 1000 வருட கால வரலாற்றைக் கொண்ட 9.7மூமான முஸ்லிம்கள் இந்நாட்டு பிரஜைகள் என்ற வகையில் வரலாற்று நெடுகிலும் பல்லினஇ பல கலாச்சார மதங்களை பின்பற்றுகின்ற சகலருடனும் சமாதான சகவாழ்வை பேணி கரைந்து போகாமலும் கரைந்து

02



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மின்னிதழ் நவீனத்தின் அடுத்த கட்ட பாய்ச்சல்!

கல்முனைநெட் இன்று உலகளாவியவலையமைப்பையும்வாசகர்களையுமகொண்டுதமிழ்கூறும்நல்லுலகம்கொண்டாடும்இணையம்.அதன்அடுத்த கட்டபாய்ச்சல்இது ..இப்படைதோற்கின்எப்படைவெல்லும்என்பதுபோல் ஊடகப்படைபணிஒன்றுதமிழோடுபுறப்படுகிறது .இவர்போலயாருண்டுஎன்று இப்போதேகல்முனைநெட்பேரைஊர்சொல்லத்தொடங்கிவிட்டதுசிறந்தஊடகம்ஒன்று.

பல்வேறுகாலகட்டங்களிலும்பல்வேறுகளச்சூழ்நிலைகளில்சமூகத்தைதாங்கிநிற்கவேண்டும். வர்த்தகமுதலைகளின்கோரப்பற்களிலிருந்துதப்பிநேர்மைவழிநின்றுசமூகப்பணிஆற்றவும்



அரசியல்பேரழுத்தங்கள் தாண்டிஅஞ்சாமல்உண்மையைநிலைநாட்டவும்நெஞ்சுரம்மிகவும்வேண்டும். அப்படிப்பட்டகல்முனைநெட்ஒருசமூகத்தின்பிரதிநிதிமாத்திரமல்லஅதுகாலத்தின்பிரதிநிதியும்கூட .

பண்பட்டநீதிநெறிவழுவாதவைரம்போன்றபடைப்பாளிகளையும்ஆலோசகர்களையும்தன்னகத்தேகொண்டுவெளிவரஇருக்கும்இந்தகல்முனைநெட்இதழுக்குஎனதுமனமார்ந்தவாழ்த்துக்கள்.

எங்களைஎப்போதும்பிரமிப்பில்ஆழ்த்தும்வண்ணம்புதுமுயற்சிகளைசமூகத்திற்காய்ஆரம்பித்துஎன்றும்முன்மாதிரிஊடகவியலாளராகவிளங்கும்கேதீஸ்அவர்களுக்கும்பிரதமஆசிரியராக எங்கள்ஊடகவியலாளர்களின்சிகரமாகவிளங்கும்மதிப்பிற்குரியசகாதேவராஜா அவர்களுக்கும்ஆலோசகர் குணராஜா அவர்களுக்கும் ஏனையஅனுபவமும்உணர்வும்கொண்டஊடகவியலாளர்குழுவினருக்கும்நன்றியும்வாழ்த்துக்களும் .

**Dr இரா.முரளீஸ்வரன்**
**வைத்திய அத்தியட்சகர்**
**ஆதார வைத்தியசாலை**
**கல்முனை**

## சவால்களை முறியடித்து முன்னேற வேண்டும்

தமிழ்கூறு நல்லுலகஅனைத்துநெஞ்சங்களுக்கும் தைத்திருநாள் நல்வாழ்த்துகள். தமிழர்திருநாளில் உதயமாகும் கல்முனைநெற்வாராந்தமின்னிதழின்கன்னிஇதழுக்குஇந்தவாழ்த்துச்செய்தியைவழங்குவதில்அகமகிழ்வடைகின்றேன்.

கடந்தஐந்துவருடகாலமாககல்முனைநெற்இணையத்தளமானதுஇப்பிராந்தியத்தினதும்சிறுபான்மைச் சமூகங்களினதும்உரிமைகளுக்காகவும்இனஐக்கியத்துக்காகவும்சிறப்பாகபங்களிப்புசெய்துவருவதைநானறிவேன்.

சமகாலத்தில் சுகாதாரத்து



றையினரின்முக்கியத்துவம் அனைவரும் அறிந்ததே. நாம் மிகுந்தஅர்ப்பணிப்புடன் இனமதபிரதேசவேறுபாடுபார்க்காதுசேவையாற்றிவரும்வேளைஎமதுபிராந்தியத்தில்நிலவும்இனவாதம்மற்றும்பிரதேசவாதம் காரணமாகசிலவேண்டத்தகாதமுரண்பாடுகள்தோற்றுவிக்கப்படுவதையும்காண்கிறோம்.

இந்நிலையில்உண்மையானசெய்திகளையும்தகவல்களையும்மக்கள்மத்தியில்கொண்டுசேர்க்கவேண்டியபாரியதார்மீகபொறுப்புஊடகங்களுக்குஇருக்கின்றன.

எனவேகல்முனைநெற்வாராந்தமின்னிதழானதுஊடகதர்மம்பேணிசவால்கள் அனைத்தையும்முறியடித்துவெற்றிநடைபோடுவதற்குமனமாரவாழ்த்துகிறேன்.

**Dr. குண.சுகுணன்**
**பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர், கல்முனை**

## போர் குற்றம்:சர்வதேச குற்றவியல்...

இலங்கைக்கான வதிவிடப்பிரதி நிஹனா சிங்கரிடம் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வலியுறுத்தியுள்ளார்.

அதேநேரம் நிகழ்த்தப்பட்ட இனப்படுகொலை உள்ளிட்ட அனைத்து விடயங்களுக்கும் அரசாங்கம் பொறுப்புக்கூறுவது அவசியம். அதிலிருந்து எந்த ஆட்சியாளர்களாலும் விலகிச்செல்ல முடியாது. பொறுப்புக்கூறல் செய்யப்படாது நல்லிணக்கம் சாத்தியமே இல்லை.இதற்கான அழுத்தங்கள் எதிர்வரும் காலங்களில் மேலும் வலுவடையும். இந்த விடயங்களை அரசாங்கத்திடம் திடமாக எடுத்துக் கூறும்படியும் அவர் எடுத்துரைத்துள்ளார்.

## முஸ்லிம்கள் இந்த நாட்டின் தேசப்பற்றாளர்கள்

வாழ நிர்ப்பந்திக்கப்படாமலும் தனித்துவத்தை பாதுகாத்து வாழ்ந்து வந்துள்ளனர். ஆசிய நாடுகளில் பெரும்பான்மை மக்களுடன் இரண்டறக்கலந்து தனித்துவத்தை இழக்கும் நிலை உருவாகியது போன்று இலங்கை முஸ்லிம்களுக்கு ஏற்படவில்லை.

அரசியலில் பங்கேற்புஇ பாராளுமன்ற பிரநிதித்துவம்இ பெரும்பான்மை அரசியல் கட்சிகளுடன் இணைந்து செயற்படல்இ நாட்டின் சுதந்திரம்இ வளர்ச்சிஇ முன்னேற்றம் போன்ற விடயங்களில் முஸ்லிம்களின் வகிபங்கு முக்கியமானது.

## கல்முனை முதல்வரின் ஆசிச் செய்தி

கடந்த ஐந்து வருடகாலமாக இப்பிராந்தியத்தினதும் சிறுபான்மைச் சமூகங்களினதும் கல்வி, கலாசார, பொருளாதாரமேம்பாட்டுக்காகவும் இன ஐக்கியத்துக்காகவும் சிறப்பாக பங்களிப்பு செய்து வருகின்றது.

தற்போது எமது நாட்டில் வேரூன்றியுள்ளஇனவாதத்திற் குமத்தியில், சிறுபான்மைச்சமூகங்களின்பாதுகாப்பு கேள்விக் குறியாகியுள்ள சூழ்நிலையில் சிறுபான்மைச்சமூகத்தினர்தமதுஅபிலாஷைகளையும் உரிமைகளையும் உறுதிப்படுத்திக்கொள்வதில்பெரும்சவால்களைஎதிர்நோக்கிவருகின்றோம்.

இவர்களால் பரப்பப்படுகின்றவதந்திகளினாலும் தீய கருத்துகளினாலும் அப்பாவிமக்கள் குழம்பிப் போவதுடன்ச மூகங்களிடையேயும் ஊர்களிடையேயும் பாரிய முரண்பாடுகளும் விரிசல்களும் ஏற்படுகின்றன. இவ்வாறான சந்தர்ப்பங்களில் எவ்வளவுதான் விளக்கங்கள் கொடுக்கப்பட்டாலும்அவைசற்றும் கவனத்தில் எடுக்கப்படாமல், வதந்தி எனும் தீச்சுவாலை பற்றியெரிவதைக்காண்கின்றோம்.

இவ்வாறான பின்புலத்தில் இப்பிராந்தியத்தைமையப்படுத்தி வெளியிடப்படுகின்ற கல்முனை நெற் வாராந்த மின்னிதழானது ஊடகதர்மம் பேணி, உண்மை, நேர்மைமிக்கதானநடுநிலைஊடகமாகசெயற்படும்என்கிறநம்பிக்கையுடன்அதுசவால்கள்அனைத்தையும்முறியடித்து, வெற்றிநடைபோடுவதற்கு ஆத்மார்த்தமானவாழ்த்துக்களைதெரிவித்துக்கொள்கின்றேன்.

**சட்டத்தரணிஏ.எம்.றகீப்** LLB, JPUM
**கல்முனைமாநகரமுதல்வர்**

## உதயமாகும் ஊடகப்புரட்சி

காணப்படுகின்றன. இதன்வளர்ச்சிப்பயணத்தில்ஒருஅங்கமாகதைத்திருநாளில்வாராந்த மின்னிதழைவெளியிடுவதுமேலும்சிறப்பாகஉள்ளது.

சமகாலத்திற்கேற்பமக்களுக்குதேவையானசரியானஉண்மையானதகவல்களைவழங்கவென இவ்விணையக்குழுமம் ஊடகப்புரட்சியொன்றைஆரம்பித்துள்ளமைமிக்கமகிழ்ச்சிதருகிறது. கொரோனாதீநுண்மியின் தாக்கம் எம்பிரதேசத்தில் அதிகரித்துவருகின்ற இவ்வேளையில் இம்மின்னிதழின் வகிபாகம் வரவேற்கத்தக்கது.

இதன்பணிமேலும்தொடர்வதுடன்கல்முனைநெற்ஊடகவலையமைப்பின்வளர்ச்சிஉச்சத்தைதொடவேண்டும்எனவாழ்த்துவதுடன் தைப்பொங்கல் நல்வாழ்த்துக்களையும்உலகில்வாழும்அனைத்துதமிழ்மக்களுக்கும்கல்முனைநெற்மின்னிதழ்ஊடாகதெரிவித்துக்கொள்கின்றேன்.

**ரி.ஜே.அதிசயராஜ், பிரதேசசெயலாளர்**
**கல்முனைவடக்கு**

## புத்தாண்டில் உதயமாகும் வியத்த குமாற்றம்

கடந்தஐந்துவருடத்திற்கும் மேலாகதனது அளப்பெரியசேவையினைவழங்கிவருகின்ற சூழலிலேஅதனுடைய ஸ்தாபகரும் இளம் ஊடகவியலாளருமானபுவிநேசராசாகேதீஸின் அயராதமுயற்சியில் இவ் ஊடகஅமைப்பின் பிரதமஆசிரியரும் ஜனாதிபதிவிருதுபெற்ற அம்பாறைமாவட்டத்தின் மூத்தஊடகவியலாளரும்கல்முனை நெற் ஊடகவலையமைப்பின் இயக்குனர் சபை உறுப்பினருமானவிபுலமாமணிதிருவி.ரிசகாதேவராஜா மற்றும் எமதுமண்ணின் மைந்தனும் தினகரன் பத்திரிகையின் முன்னாள் பிரதமஆசிரியரும் மூத்தஊடகவியலாளருமான இவ் ஊடகஅமைப்பின் ஆலோசகருமாகசெயற்படுகின்றதிருக.குணராசாஅவர்களும் இணைந்துஒரு இலத்திரனியல் பத்திரிகையைஉழவர் திருநாளாம் தைத்திருநாள் தினத்தில் வாசகர்களுக்காகவெளிக்கொணரும் செயற்பாடுபாராட்டுக்குரியதும்

இப்பிராந்தியத்தின்தமிழ் மொழிபேசுகின்ற மக்களும் வாசகர்களும் பெருமைப்படக்கூடிய சரித்திரமுக்கியத்துவம் வாய்ந்தசெயற்பாடாகும்.

இப்பிராந்தியத்தின் அபிவிருத்திச் செயற்பாடுகள் அபிவிருத்திக்கானதேவைகள் பொதுமக்களின் தேவைகள் என்பவற்றைவெளிப்படுத்தஊடகங்களின் பங்களிப்பும் மிகவும் முக்கியமானதாகும்.

கல்முனை நெற் ஊடகம் அதன் பணிகளை நிலையாகமுன்னெடுத்துமேலும் மேலும் வளரஎன் வாழ்த்துக்களைதெரிவித்துக்கொள்கின்றேன்.

**வேதநாயகம் ஜெகதீசன்**
**மேலதிகஅரசாங்கஅதிபர்அம்பாறைமாவட்டம்.**

## கல்முனையில் ஆயிரத்தை தாண்டிய...

தொற்றுக்களின் எண்ணிக்கை 1012 ஆகியது. கல்முனைப்பிராந்தியத்துள் வருகின்ற அக்கரைப்பற்றுக் கொத்தணியில் 972பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. மீதி பிராந்தியத்தின் ஏனைய சுகாதாரப்பிரிவுகளில் இனங்காணப்பட்டுள்ளது. கல்முனை பிராந்திய சுகாதார சேவைப்பணிப்பாளர் டொக்டர் குண.சுகுணன் இன்று(14) வியாழன் காலை இத் தரவுகளை வெளியிட்டுள்ளார்.

**பிரதேசங்களின் நிலைமை**

பிராந்தியத்தில் தனியொரு பிரிவு அதிகூடிய தொற்றுக்களைக்கொண்டது என்றால் அது 310 தொற்றுக்களைக் கொண்ட அக்கரைப்பற்று எனலாம். இரண்டாவதாக கல்முனை மாநகரஎல்லைக்குள் 350தொற்றுக்கள் அதிகரித்திருக்கிறது.

கல்முனை தெற்கில் 268பேரும் சாய்ந்தமருதில் 65பேரும் கல்முனை வடக்கில் 17பேரும் தொற்றுக்குள்ளாகியுள்ளனர். அட்டாளைச்சேனையில் 88தொற்றுக்கள்.பொத்துவிலில் அதிகரிப்பு காட்டியுள்ளது. அங்கு தொற்றுக்களின் எண்ணிக்கை 77ஆக உயர்ந்துள்ளது. உல்லைப் பகுதி முடக்கப்பட்டுள்ளது. ஆலையடிவேம்பில் 36பேர் இனங்காணப்பட்டுள்ளனர்.இறக்காமத்தில் 24பேரும்திருக்கோவிலில் 15பேரும் சம்மாந்துறையி;ல் 27பேரும் காரைதீவில் 46பேரும் நிந்தவூரில் 20பேரும் நாவிதன்வெளியில் 17பேரும் இனங்காணப்பட்டுள்ளனர். இன்னும் பெறப்பட்ட பிசிஆர் சோதனைகளின் பெறுபேறுகள் கிடைக்கப்பெறவில்லை. அவை வந்தால் இன்னும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பிராந்தியத்திலுள்ள பாலமுனை சிகிச்சை நிலையத்தில் 88பேரும் புதிதாக உருவாக்கப்பட்ட மருதமுனை சிகிச்சை நிலையத்தில் 66பேரும் சிகிச்சை பெற்றுவருகின்றனர். பிராந்தியத்திலுள்ள தனிமைப்படுத்தல் நிலையங்களான ஒலுவிலில் யாரும் தனிமைப்படுத்தப்படவில்லை.அட்டாளைச்சேனையில் 155பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.. நுரைச்சோலை நிலையம் தயாராகிவருகிறது. இதுவரை கல்முனைப்பிராந்தியத்தில் ஆறு கொரோனா இறப்பு ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதுவரை இப்பிராந்தியத்தில் 23685பேருக்கு பிசிஆர்பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.பிசிஆர் சோதனை 12674பேருக்கும் அன்ரிஜன் சோதனை 11011பேருக்கும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## பாராளுமன்ற உறுப்பினர்...

வெளிப்படுத்தி உறுதியாய் திகழும் என்பதில் ஐயமில்லை.

அன்றாட நிகழ்வுகளை நாம் அறியவும், அவற்றின் உண்மைத் தன்மையைப் புரியவும் துணை நிற்பதோடு பத்திரிகைகள் எம்மை ஆளுகையும் செய்கின்றன. புதிய நுட்பங்களை உள்வாங்கி இம்மின்னிதழ்ப் பத்திரிகையானது காலத்தைக் காட்டும் கண்ணாடியாகச் செயல்படும் என நம்புகின்றேன்.

புதிதாய் உதயமாகும் இவ் இணையவழிப் பத்திரிகையானது தமிழ் மக்களின் மனம் நிறைந்த பத்திரிகையாகவும், எமது உரிமைக் குரலாகவும் நீதியோடு குரல் எழுப்பி தனித்துவத்தோடு திகழ வேண்டும் என வாழ்த்தி நெற்றிக் கண் பார்வையின் போக்கோடும் இதன் வீச்சோடு இப்பத்திரிகையின் பணி பாரெங்கும் ஓங்கிச் சிறக்க நல்லாசியுரை உவந்து அளிக்கின்றேன்.

## கிழக்கில் கொரோனா கோரத்தாண்டவம்!

கொரோனா வைரஸ் பரவல் மிகவும் திவீரமாகிவருவதை இது கட்டியம்கூறி நிற்கிறது.

கடந்த மார்ச் மாதமிருந்து பேலியகொட மூலமாக இதுவரை மட்டக்களப்பு மாவட்டத்தில் 405பேரும் கல்முனை பிராந்தியத்தில் 1004பேரும் திருமலை மாவட்டத்தில் 234 பேரும் அம்பாறை பிராந்தியத்தில் 77பேருமாக 1722பேர் தொற்றுக்கிலக்காகியுள்ளனர்.

மேலும் வெளிநாடு மினுவாங்கொட கந்தக்காடுகொத்தணி வெலிசற கடற்படைமுகாம் போன்ற மூலங்களிலிருந்து மீதி 23 தொற்றுக்கள் இனங்காணப்பட்டுள்ளன.

**11மரணங்கள்!**

இதுவரை கிழக்கில் சம்மாந்துறை ஒலுவில் சாய்ந்தமருது அட்டாளைச்சேனை வவுணதீவு காத்தான்குடி நாவிதன்வெளி ஆயைடிவேம்பு உகனை ஆகிய பிரதேசங்களில் மொத்தம் 11கொரோனா மரணங்கள் சம்பவித்திருக்கின்றன. கல்முனைப்பிராந்தியத்தில் 06பேரும் மட்டக்களப்பு மாவட்டத்தில் 04பேரும் அம்பாறைப்பிராந்தியத்தில் ஒருவருமாக இந்த 11 மரணங்கள் சம்பவித்திருக்கின்றன.

நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்லும் கொரோனா தொற்றாளர்களால் கிழக்கின் நிலைமை மோசமாகிக்கொண்டுவருகிறது.

சுகாதாரத்துறையினரும் பாதுகாப்புத்துறையினரும் கைவிரிக்கும்நிலை வரை காத்திருக்காமல் பொது மக்கள் எச்சரிக்கையுடன் செயற்படுமாறும் சமூக இடைவெளியை சரியாக கடைப்பிடிக்குமாறும் முகக்கவசங்களை அணியுமாறும் குழுக்களாக செயற்படுவதை குறைக்குமாறும் தேவைகளுக்கு மாத்திரம் வெளியில் செல்லுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## ரூ.1000 அதிகரிப்பில் சுற்றுகிறது பந்து

எனினும் பெருந்தோட்ட நிறுவனங்கள் தொடர்பில் கொள்கை ரீதியான தீர்மானத்தை மட்டுமே எடுக்கமுடியுமென அரசாங்கம் திட்டவட்டமாக அறிவித்துள்ளது. சம்பந்தப்பட்ட தொழிற்சங்கங்கள் பெருந்தோட்ட நிறுவனங்கள் அரசாங்கம் சார்பாக தொழில் அமைச்சர் அடங்கலாக முத்தரப்புக் கலந்துரையாடல் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இது தொடர்பிலான இறுதித் தீர்மானத்தை தொழில் அமைச்சர் நாட்டுக்கு அறிவிப்பார்.

## வடக்கு, கிழக்கில் கனமழை!

குளங்களின் வான் கதவுகளும் திறக்கப்பட்டுள்ளன. கிளிநொச்சி இரணைமடு குளத்தின் வான்கதவுகள் அனைத்தும் தொடர்ந்தும் திறந்து விடப்பட்டுள்ளதுடன் மாவட்டத்தின் பலநீர்ப்பாசன குளங்கள் தொடர்ந்தும் வான் பாய்ந்து வருவதாக நீர்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்முனை NET kalmunainet.com e paper

2021ஜனவரி 14 வியாழக்கிழமை
கல்முனைநெற் ஊடக வலையமைப்பு
பிரதானவீதி பாண்டிருப்பு, கல்முனை
T.P.:0776965343, 0762933026, 0773457915
E.Mail: kalmunainet@gmail.com, ceditorsaga@gmail.com
சிந்தனைக்கு விருந்து
அகர முதல எழுத்தெல்லாம் ஆதி பகவன் முதற்றே உலகு

# தார்மீக பொறுப்புடன் தடம்பதிக்கின்றோம்

தைப்பொங்கல் இன்று உழவர் திருநாள், உலகெங்கும் வாழும் தமிழர்கள் போற்றும் நன்னாள் வழமைபோன்று புதிய ஆண்டிலும் புதிய நம்பிக்கையுடன் தை பிறந்திருக்கிறது. தை பிறந்தால் வழி பிறக்கும் என்று தான் கடந்த ஆண்டையும் வரவேற்றோம்.

2020 நமக்கு வலிகளைத்தான் தந்து விட்டுச் சென்றிருக்கிறது. கொரோனா என்ற கொடிய விஷக்கிருமிகளால் இலட்சக்கணக்கான உயிர்களை பலிகொண்டது பசி,பட்டினி, இயற்கை அனர்த்தங்கள்.அனைத்துமே கோரத்தாண்டவம் ஆடிய பின்பே கடந்த ஆண்டு விடைபெற்றுச் சென்று இருக்கிறது.

என்றாலும்,எந்தச் சவாலையும் எதிர்கொள்ளும் மனோபலத்துடன் எழுந்து நிற்க தயாராகிவிட்டோம்.இந்த ஆண்டின் எதிர்பார்ப்பும் நம்பிக்கையும் இதுவாகத்தான் இருக்கிறது. மனவலிமையும் நம்பிக்கையும் தான் வாழ்க்கை. இது யதார்த்தமான உண்மை. ''பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையினானே''

என பவணந்தி முனிவரின் நன்னூல் சூத்திரம் அப்போதே சொல்லி வைத்திருக்கிறது. மாற்றமடையும் சமூகத்தில் நவீனத்துவம் புக வேண்டும் என்பதையே நன்னூல் மிக பவ்வியமாக எடுத்துரைத்துள்ளது.இந்த வகையில், புதிய வரவொன்று கல்முனையில் இன்று புதிய வரலாற்றைப் பதிவு செய்து தடம் பதிக்கிறது.இதுவரை காலமும் இணையவழி மூலம் தகவல்களை துல்லியமாக வழங்கி வரும் கள்முனைநெற் ( kalmunai Net ) இன்று முதல் இணையவழி மின்னிதழ் பத்திரிகையையும் வெளியிடுகின்றது. காலத்தின் தேவை அறிந்து இதனை வெளியிடுவதில் நாம் பெருமை கொள்கின்றோம்.

தகவல் தொழில்நுட்ப புரட்சி பூகோளத்தை விரல்களுக்குள் கொண்டுவந்து இருப்பதோடு உலகை வியக்கவைக்கும் வளர்ச்சிக்கும் இட்டுச் சென்றிருக்கிறது. மின்னிதழ் என்பது தொழில்நுட்ப வளர்ச்சியின் அபரிமித உருமாற்றம். விரும்பியோ விரும்பாமலோ இந்த மாற்றத்துக்கு இசைந்து நாமும் பயணித்தேயாக வேண்டும். அன்றேல், கால ஓட்டத்தில் நாம் மழுங்கடிக்கப்படும் நிலையே ஏற்படும்.

ஸ்மார்ட்போன்கள் ( smart phones ) இன்று உலகை வியாபித்திருக்கும் கையடக்கக் கணினிகளாகும். இரு விரல்களால் உலகை கையாளும் அளவுக்கு ஸ்மார்ட்போன் தொழில்நுட்பம் வளர்ச்சியின் உச்சத்தில் இருக்கிறது. இதற்குள், அச்சு ஊடகங்களும் தன்னை உருமாற்றி மின் இதழாக பரிணமிக்கின்றன. இந்த மாற்றத்தினுள் நம்மையும் உள்வாங்கிக் கொள்வது தான் காலத்தின் கட்டாயம்.

ஜனநாயகத்தின் முக்கிய தூண்களில் ஒன்று ஊடகம்.எத்தகைய மாற்றங்கள் வந்தாலும் ஊடகத்தின் அடிப்படை சிதைந்து விடக்கூடாது என்பதே எதிர்பார்ப்பு. ஊடக தர்மத்தில் இருந்து சிறிதும் நெறி பிறழாது மக்களின் அடிநாதமாக மின் இதழ்களும் பிரதிபலிக்க வேண்டுமென்ற உலகத்தின் எதிர்பார்ப்பு வீண் போகவில்லை என்பது நிரூபணமாகியிருக்கிறது.

மின் இதழ்களின் வருகை அச்சு ஊடகங்களில் ஓரளவு பாதிப்பை ஏற்படுத்தியிருக்கிறதென்பது உண்மைதான். சுமார் இருபத்தைந்து ஆண்டு களுக்கு முன்பே ஐரோப்பிய நாடுகள் அச்சு இதழ்களுக்கு விடை கொடுத்து மின்னிதழ்களுக்குள் பிரவேசித்தன.

காலம் தாழ்ந்தாலும் இலங்கையும் தன்னை நவீனத்துவத்துக்குள் இணைத்துக் கொள்வதில் பின்வாங்கவில்லை. இலங்கையில் வெளியிடப்படும் அனைத்து அச்சு ஊடகங்களும் இன்று மின் இதழ்களை பிரசுரிப்பதில் முன்னணியில் நிற்கின்றன. இதன் அடிப்படையில்,

இணையவழி ஊடகமான கல்முனைநெற் மின் இதழாக கால் பதிப்பதில் புதுமை இல்லாவிட்டாலும் கால ஓட்டத்தில் நாம் இணைகிறோம் என்பதில் பெருமை கொள்கிறோம். ஊடகங்களில் ஓங்கி ஒலிக்காத ஒரு இனத்தின் குரலாய் கல்முனைநெட் மின்னிதழ் பிரசவமானாலும் இங்கு வாழும் சகல மக்களினதும் உயிர் துடிப்பாக நாம் செயல்படுவோம் என்பதை உறுதியுடன் கூறுகிறோம்.

ஊடகத் துறையில் நீண்ட கால அனுபவம் மிக்கவர்களையும் புடம்போட்ட எழுத்தாளர்களையும் கல்விமான்களையும் கொண்ட ஆசிரியர் குழாம் கல்முனைநெட்டுடன் இணைந்து அர்ப்பணிப்புடன் சேவை வழங்குகின்றனர். ஒழுக்க நெறியும் நடுநிலையும் இந்த மின்னிதழின் தாரக மந்திரமாகவே இருக்கும். இணையவழி ஊடகம் என்பதற்காக இனங்களை மோதவிட்டு பரபரப்பு தேடும் கேவலத்தில் நாம் இறங்கப் போவதில்லை.சமூக வலைத்தளங்களின் அசிங்கங்களை புறந்தள்ளி, தனித்தன்மையுடன் நடுநிலையாக பயணிப்போம் என்பதை நாம் உறுதியுடன் அழுத்தி கூறுகின்றோம்.

# கிழக்கில் தமிழ்க்கட்சிகள் ஓரணியில் இணையுமா?

புவிநேசராசா கேதீஸ்



புத்தாண்டு பிறந்துள்ளது.கிழக்கு மாகாண சபைத் தேர்தல் நடைபெறக்கூடிய அறிவிப்புக்கள் எந்நேரமும் வெளியாகலாம். எனவே காலம் தாழ்த்தாது அத் தேர்தலில் அனைத்து தமிழ் கட்சிகளும் விட்டுக்கொடுப்புடன் ஒன்றிணைந்து ஓரணியில் இறங்க முடிவுகளை எடுக்க வேண்டும்.

இதுவே கிழக்கு மாகாண தமிழ் மக்கள் மத்தியில் பரவலாக ஒருமித்து எழும் கோரிக்கையுமாகும்.

இந்த கோரிக்கைகள் கருத்துக்கள் கடந்த ஒரு வருடத்திற்கு மேலாக மக்களாலும் பொது அமைப்புக்களாலும் தமிழ் ஊடகங்கள் வாயிலாகவும் முன்வைக்கப்பட்டு வருகின்ற போதும் இதுவரை ஆக்கபூர்வமான முடிவுகள் எட்டப்படாமல் உள்ளமை வேதனையான விடயமே.

தொடர் சோதனைகள் இழப்புக்கள் பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில் காலத்திற்கு காலம் தேர்தல்களை தமிழர்கள் குறைவின்றி எதிர்கொள்கின்றனர்.அரசியல் பழிவாங்கல்கள் தொடர் நெருக்குதல்கள் காணி சுரண்டல்கள் அபிவிருத்தியிலும் புறக்கணிப்புக்களையும் இருப்புக்களை தக்க வைப்பதில் பல்வேறு சவால்களையும் கிழக்குமாகாண தமிழ் மக்கள் அதிகமாகவே எதிர்நோக்கி வருகின்றமை வெளிப்படை.

கிழக்கு மாகாணசபை தேர்தல் தொடர்பாக தங்கள் கருத்துக்களை தொடர்ந்து முன்வைத்துவரும்போதும் தமிழ் கட்சிகள் தங்கள் கட்சி அரசியலுக்கப்பால் கிழக்கு மாகாண தமிழர்கள் நிலைமையினை புரிந்து செயற்படுகின்றார்களா என்ற கேள்விகளும் எழாமலில்லை.

இத்தனை சவால்களுக்கு மத்தியிலும் கடந்த கால தேர்தல்களில் தமிழ் மக்கள் வழங்கிய ஆணையினை பெற்று வெற்றி பெற்ற தமிழ் கட்சிகள் மக்களின் எதிர்பார்ப்புக்கேற்ப செயற்படத்தவறியதன் விளைவுகளையும் கடந்த கால தேர்தல்களில் அவதானிக்க முடிந்தது.

இணக்க அரசியலுக்கு முக்கியத்துவம் கொடுத்து த.தே.கூட்டமைப்பு செயற்பட்ட விதமும் விட்டுக்கொடுப்புக்களும் தமிழர்களுக்கு பல பாதிப்புக்களை ஏற்படுத்தியிருந்தன. ஆனால் இணக்கத்திற்கு அழைக்கப்பட்டவர்கள் அவர்களின் இனம் சார்ந்த நலனுக்கு மட்டும் முக்கியத்துவம் கொடுத்தே செயற்படுகின்றனர்.

தமிழர்கள் பல விடயங்களில் புறக்கணிக்கப்பட்டிருந்தும் த.தே.கூட்டமைப்பு இணக்க அரசியல் என்ற வார்த்தைக்கு கொடுத்த முக்கியத்துவத்தால் கிழக்கு மாகாண தமிழர்கள் சந்தித்து கொண்டிருக்கும் சவால்களும் பாதிப்புக்களும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைகள் மீது கடும் விமர்சனங்களை ஏற்படுத்தியுள்ளது.

தீர்வு நோக்கியதாகவும் அபிவிருத்தி நோக்கியதாகவும் சமாந்தரமாக நகர வேண்டிய தேவை தமிழர்களுக்கு உள்ளது .குறிப்பாக கிழக்கில் தமிழர்களுக்கெதிராக மாற்று இன அரசியல் வாதிகளால் முன்னெடுக்கப்படும் சதித்திட்டங்கள் மறைக்கமுடியாத உண்மைகளே.

கிழக்கு மாகாண முதலமைச்சராக தமிழர் ஒருவர் தெரிவு செய்யப்படுவதற்கு கட்சி அரசியலுக்கப்பால் அனைத்து தமிழ் தரப்பும் ஒற்றுமையாக செயற்பட வேண்டியது அவசியமாகும்.

கொள்கையளவில் இணக்கமில்லாத கட்சிகளுடன் இணைந்து எவ்வாறு செயற்படுவது என்ற கருத்து ஒரு பக்கமாகவும் சில கட்சிகள் தனித்து போட்டியிடுவதில் ஆர்வம் காட்டுவதையும் அவதானிக்ககூடியதாக உள்ளன. இதற்காக அவர்கள் முன்வைக்கும் கருத்துக்கள் தமிழர் நலனுக்கு கொடுக்கும் முக்கியத்துவத்தைவிடவும் அவர்கள் கட்சிகள் சார்ந்த விடயங்களில் அக்கறை காட்டுவதாகவே உள்ளன.

இணைந்த வடக்கு கிழக்கு தமிழரின் அடிப்படைக்கொள்கையாக இருந்தாலும் வடக்கு மாகாண சபைக்கு தேர்தல் தனியாக நடைபெறுவதும் கிழக்கு மாகாண சபைக்கு தேர்தல் தனியாக நடி;டபெறுவதுமே இணைந்த வடக்கு கிழக்கு கொள்கைக்கு அப்பால் என்பது வெளிப்படையான விடயம்.

இந்நிலையில் கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் பங்குபற்றும் தமிழ் கட்சிகள் இணைந்த வடக்கு கிழக்குக்கு கொள்கைக்கு எதிரான நிலைப்பாட்டிலுள்ள தமிழ் கட்சியுடன் எவ்வாறு இணைந்து செயற்படுவது என்று கூறுவதையோ வடக்கு கிழக்கு இணைப்பு கொள்ளையில் மாறுபட்ட நிலைப்பாட்டில் உள்ள கட்சி இவைகளை காரணம் காட்டி ஒன்றிணையாமல் இருப்தையோ தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.

கிழக்கு மாகாண தமிழர்கள் எதிர்கொள்ளும் சவால்களுக்கு ஓரளவேனும் முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமாக இருந்தால் கட்சி அரசியலுக்கு முக்கியத்துவம் கொடுக்காது அனைத்து தரப்பும் விட்டுக்குகொடுப்புக்களுடன் செயற்பட்டு தமிழ் மக்களின் ஒருமித்த கோரிக்கையான அனைத்து தமிழ் கட்சிகளும் ஓரணியில் இணைந்து கிழக்கு மாகாண சபை தேர்தலை எதிர்கொள்ள வேண்டும். இதுவே தமிழ் கட்சிகள் என்று கூறுவதிலும் தமிழர் நலன் சார்ந்தவர்கள் என்று கூறுவதிலும் நியாயமும் தமிழர் நலனில் அக்கறையும் உள்ளதாக இருக்கும்.

கல்முனைநெற் மின்னிதழ் ஆசிரியபீடம்
பிரதம ஆசிரியா: வி.ரி.சகாதேவராஜா,
இணைஆசிரியர்: பு.கேதீஸ், ஆலோசகர்: க.குணராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மனிதவாழ்வுடன் பிரிக்க முடியாத அரசியல்!

அரசியல் என்பது மனித வாழ்க்கையிலிருந்து பிரிக்க முடியாத ஒரு தத்துவம் அல்லது கொள்கை. அரசியல் என்பது வாழும் முறை (Way of life) அல்லது வாழ்க்கை முறை (Way of living) ஆகும். அரசியல் என்பது சமுதாய வாழ்க்கைக்கு அமைதியைத் தருவது. சமுதாயத்தில் பலர் கூடி வாழ்வதற்கும், பொருளியல் ஒழுங்கியல் முறைகளுக்கும் அரசியலே வழிவகுக்கிறது. அறநெறிகளில் மனிதகுலம் ஒன்றி நின்று வாழ்வதை உறுதிப்படுத்தத்தான் அரசியல் தோன்றுகிறது, தொண்டு செய்கிறது. அரசியல் தத்துவங்கள் மனித உலக வரலாற்றின் நிகழ்வுகளி




பி.எஸ்.புவிராஜா, என். திவாகராஜ்
pasampuvi56@gmail.com, hinthiva@live.com

லிருந்து தோற்றம் பெறுகின்றன.

சிறந்த அரசியல் நிலவும் நாட்டில் ஒழுங்குகள் நிலவும். வாழ்க்கையை வாழ்வதற்குத் தேவையான அனைத்தும் எளிதில் கிடைக்கும். அறிவுத்துறை மேம்படும். பகை ஒடுங்கிப் பண்பாடு விளங்கும்.


ஆனால் நமது இலங்கை நாட்டில் பகை ஒடுங்கி பண்பாடு விளங்கும் என்பது தலைகீழாக மாறி பகை ஓங்கி பண்பாடு சீரழியும் விதமாக அரசியலை சிலர் கையாழ்வதால் உன்னதமான அரசியல் உவத்திரமான அரசியல் என்று சிந்திப்பவர்களும் உண்டு.

தேர்தல் அரசியலை பொறுத்தவரை பொதுவான கட்சிகளின் கொள்கை திட்டம் செயல்பாடுகளை மையப்படுத்தி பிரசாரம் செய்து மக்களின் ஆதரவுகளை பெறும் பணிகள் மறைந்து குற்றங்களையும் குறைகளையும் தனிநபர் விமர்ரசனங்களையும் முன்நிறுத்தி பழிதீர்க்கும் பிரசார யுக்திகளே இலங்கையில் அனைத்து தேர்தல்களிலும் தற்போது வேர் ஊன்றி உள்ளது.

பணம் பதவி சலுகைகளை அதிக அளவில் வழங்கும் பணம்படைத்தவர்களே வெற்றிபெற முடியும் என்ற கீழ்த்தரமான சிந்தனை விதைக்கப்படுவதால் கொள்கை கோட்பாடு உண்மை அடிப்படைஉரிமை பொதுவானவிடயங்கள் அனைத்தும் மறைக்கப்பட்டு அல்லது மறுக்கப்பட்டு தனிநபர் ஆதிக்கம் அரசியலில் முதன்மைபடுத்தப்படுவதால் சமூகநீதி ஒற்றுமையான குரல் என்பன இல்லாமல் போகும் நிலையே இங்கு உண்டு.

இவ்வாறான கசப்புணர்வுகளால் சிலர் அரசியலை வெறுப்பது உண்மை எனினும் அரசியல் இன்றி எதுவுமே இல்லை என்பதை புரிதல் நல்லது!





# உடல், உள நலம் பேணுவோம்




கா. சந்திரலிங்கம், ப. சந்திரமோகன்
chandralingham13@gmail.com
sanramohan1@gmail.com

முறையான உடற்பயிற்சி, நிறையுணவு, அமைதியான சூழல், ஒழுங்கான வாழ்க்கை முறை, இவைகளின் ஊடாக நாம் எமது உடல், உள நலத்தை சிறப்பாக வைத்துக் கொள்ள முடியும். எப்பொழுதும் சிரித்துப் பேசி மகிழ்ந்திருத்தல் எங்கள் ஆயுளை கூட்டுவதோடு, மன அமைதியையும், நோயற்ற வாழ்வையும் தரும்.

தினமும் குறைந்தது அரை மணித்தியாலங்களாவது நடைப்பயிற்சி செய்யுங்கள். வெளியில் நடக்க முடியாதவர்கள் வீட்டில் எட்டுப்போட்டு கூட நடக்கலாம். மேலும் உடல், உள நலம் சிறப்படைய யோகாசனம், தியானம் போன்றவைகளிலும் ஈடுபடலாம். உடற்பயிற்சி செய்வதனூடாக உடலின் பல பகுதிகளையும், இரத்தஓட்ட மண்டலத்தையும் சிறப்பாக இயங்க வைக்க முடியும். உடற்பயிற்சி செய்யும் போது ஆழ்ந்த சுவாசம் நடைபெறுவதால் மார்பு அதிகம் விரிவடைந்து உதரவிதானம் மேலும் கீழும் தள்ளப்பட்டு கல்லீரலின் செயல்பாடும் அதிகரிக்கும். உடற்பயிற்சியும், விளையாட்டும் அழகிய இயற்கை சூழலிலும், திறந்த வெளியிலும் செய்யும் போது மகிழ்ச்சியும் சுகமும் சிறப்பாக அமைகின்றது.

பாடசாலை மாணவர்களையும், சிறுவர்களையும் விளையாட, உடற்பயிற்சி செய்ய ஊக்குவிக்கும் போது இரத்த சுழற்சி சிறப்பாக நடைபெறுவதோடு, உடல் வளர்ச்சியுற்று, பலம் பொருந்தியதாக அமைந்து சிந்தனைத்திறன், ஞாபக சக்தி, நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கின்றது. இதயமும் ஆரோக்கியமாக இயங்கும்.

அமைதியான சூழ்நிலை மனத்திற்கு அமைதியை அளிப்பதோடு உடன்பாடான எண்ணங்களை உண்டாக்குகின்றது. இதனால் மூளையின் கார்டெக்ஸ் பகுதியில் ஏற்படும் தூண்டல், உள்ளடக்குதலை துரிதப்படுத்துவதோடு பரிவு நரம்புகளின் தூண்டலை அதிகப்படுத்தி மூளை, இதயம், எலும்புடன் கூடிய தசைகளுக்கு அதிக இரத்தத்தை அளித்து உற்சாகமான, இன்பகரமான நிலையைக் கொடுக்கின்றது.

மாறாக எதிர்மறை எண்ணங்கள், மூளையின் கார்டெக்ஸ் பகுதியில் ஏற்படும் தூண்டல் உணர்வுக்கும் உள்ளடக்குதல் உணர்வுக்கும் உள்ள ஒத்துழைப்பை பாதிக்கப்படையச் செய்யும். இதனால் வேகஸ் நரம்புகளின் தூண்டுதல், இதய இரத்தக் குழாய்களைச் சுருக்கி, இரத்தச் சுற்றோட்டத்தில் ஈடுபட்டுள்ள பல உறுப்புகளில் ஒன்றுபட்ட வேலையையும் பாதிப்படையச் செய்கின்றன. இது ஒரு மனிதனின் மனத்தையும் பாதிப்படையச் செய்து பதட்ட நிலையை உருவாக்கி நரம்புக் கோளாறுகளையும் உண்டாக்கின்றது.

ஆரோக்கியத்திற்கு நிறை உணவு அத்தியாவசியமாகும். மீன், முட்டை, பால், இறைச்சி, தாவர உணவுகளான காய்கறி மற்றும் கீரை வகைகள், அவரை, பருப்பு, பழங்கள் இவைகளை உண்பதனால் நாம் எமக்குத் தேவையான ஊட்டச்சத்தைப் பெற்றுக் கொள்ளலாம். பழங்களைத் தினமும் உண்பது உடலுக்குச் சிறந்ததாகும். உடல் எடையில் 70 சதவிகிதம் தண்ணீர் உள்ளதால் தேவைக்கேற்ப தாகம் ஏற்படும் பொழுது நீர் அருந்துதல் வேண்டும்.

45 வயதுக்கு மேற்பட்டவர்கள் உணவில் இறைச்சியை குறைத்துக் கொள்வது நலம் பயக்கும். பொதுவாக மிதமிஞ்சி உண்பதும், குடிப்பதும் உடலுக்கு தீங்கை விளைவிப்பதோடு வயிற்று தசைகளில் கூடியளவு கொழுப்புச் சேரும். இதனால் சிறுகுடல் சரிவர வேலை செய்யாத நிலையில் சமிபாட்டுக குறைவு, மலச்சிக்கல் ஏற்படுவதோடு இதயத்தின் செயல்பாட்டிற்கும் இது இடையுறாக அமைகின்றது.

மாதமொன்றுக்கு மூன்று தடவை பழங்கள் உண்டு விரதம் பிடிப்பது சிறந்த பயனை அளிக்கும். மிகுதியாய் உண்பவர்கள் பட்டினியாய் இருப்பதும் நல்ல பலனைத் தரும். உணவு சாப்பிடும் போது தொலைக்காட்சி பார்த்தல், புத்தகம் படித்தல், விவாதம் செய்தல், கோபமுறல் கூடாது. துன்பகரமான உணர்வுடன் சாப்பிடும்போது நரம்பு மண்டலம், ஜீரண உறுப்புகள், இருதய இரத்த நாள அமைப்புகள் பாதிப்படைகின்றன. இரவு படுக்கைக்குப் போகுமுன் இரண்டு மணி நேரத்துக்கு முன்பாக எளிமையான உணவை உட்கொள்ளுதல் உடலுக்கு நன்மை பயக்கும்.

உடல், உள நலம் பெறுவதற்கு தேவைக்கேற்ப ஓய்வும், தூக்கமும் மிக அவசியமாகின்றது. இரவு நேரத்தில் கண் விழித்து வேலை செய்பவர்கள் பகலில் தூங்கலாம். ஒரு குறிப்பிட்ட நேரத்துக்கு தூங்குவதும், தூங்கும் முன் சற்று உலாவி விட்டு வருதலும் ஆரோக்கியத்துக்கு உகந்தது. ஓய்வு நேரத்தைத் தங்கள், தங்கள் இரசனைக்கு ஏற்றபடி பயன்படுத்தலாம் நாடகம், சினிமா, நடிப்பு, புந்தோட்டம், கதை, கவிதை போன்ற விடயங்களில் ஈடுபடலாம். மூளையைப் பயன்படுத்தி வேலை செய்வோர் நீந்துதல், ஓடுதல், விளையாடுதல், நடைப்பயணம் செய்தல் போன்றவற்றில் ஈடுபடுவது உடலுக்கு நன்மை பயக்கும். மேற்காட்டிய விடயங்களை ஒழுங்காக கடைப்பிடித்து நாம் உடல், உள நலத்தோடு வாழ்வோம்.

## வாழ்வியல் ஆரோக்கியம்

வாழ்க்கையில் மனிதனை பூரணப்படுத்துவது மகிழ்ச்சி. அத்தகைய மகிழ்ச்சியே உடல்நல ஆரோக்கியத்தை வளர்க்கின்றது. உலக சுகாதார மையத்தின் கருத்துக்களின் படி ஆரோக்கியம் என்றால் நோயற்ற வாழ்வு என்பது மட்டும் பொருளல்ல ஒருவரின் வாழ்வில் உடல் உள ஆரோக்கியத்துடன், சமூக ரீதியான தொடர்பாடல்கள் அற்று வாழ்வது ஆரோக்கியமற்றதாகின்றது.

இங்கு உடல் ஆரோக்கியமும் உள ஆரோக்கியமும் ஒன்றுடன் ஒன்று பின்னப்பட்டுள்ளது. இதில் ஒரு ஆரோக்கியம் குறைந்தாலும் இயல்பாகவே மற்ற ஆரோக்கியமும் குறையும் என்பது கண்டறியப்பட்ட உண்மை.

மன உளைச்சல், மனச்சோர்வு மற்றும் எம் மனதை புண்படுத்தும் செயல்கள் என்பன உடல் உள ஆரோக்கியத்தில் சமனாக பாதிப்பை உண்டு பண்ணுகிறது.

இப் பாதிப்பு தொடர்வதனால் அது மன அழுத்தமாக மாறி வேண்டத்தகாத முடிவுகளை செய்ய தூண்டுகிறது.

நாம் இவ்வாறான பிரச்சனைகளில் இருந்து விடுபட உடல் உள ஆரோக்கியம் இன்றியமையாதாகின்றது.

நாம் சமூகம் சார்ந்து செயற்படும் ஒரு பூரண மனிதனாக வாழ வழிவகுக்கும் ஆரோக்கியத்தை வளர்த்துக்கொள்ள வேண்டும்.

சமூகம் சார்ந்த விஷயங்களில் நாம் விலகிச்செல்வதும் ஆரோக்கியமற்ற நிலையை உருவாக்குகின்றது.ஆதலால் முடிந்தவரை சமூக கட்டமைப்புக்களுடன் எம்மை இணைத்து மகிழ்வு தரும் வாழ்வை வாழ திட்டமிடுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோரோனா அழிவிலிருந்து மீண்டெழு



ஒரு சமுகத்தின் வளர்ச்சிக்கும் , நிலைபேற்றிற்கும் அறிவுசார்ந்த அத்திவாரம் இன்றியமையாதது. நாளைய சமுகத்தின் இளைய சிற்பிகளான இன்றைய சிறார்களே! உங்கள் அறிவுவளர்ச்சியின் அச்சாணியில்தான் உங்களின் எதிர்காலம் மட்டுமல்ல சமுகத்தினதும், நாட்டினதும் ஒட்டுமொத்த எதிர்காலமும் தங்கியுள்ளது. எனவேதான் இந்த இக்கட்டான கோவிட் -19 அச்சுறுத்தலுடன் கூடிய காலகட்டத்திலும் முறையான கல்விச் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்லும் முடிவினை அரசும் எடுத்துள்ளது.

**மாணவ செல்வங்களே!**

விதந்துரைக்கப்பட்ட சுகாதார பழக்கவழக்கங்களை அலட்சியம் செய்யாது தவறாது கடைப்பிடித்தல் மூலம் நாம் எமது வழமையான பாடசாலை செயற்பாடுகளில் ஈடுபட முடியும். தாக்குதல்-தப்பிச்செல்லல் பொறிமுறையின் ஊடாக மேற்கூறிய பழக்கவழக்கங்கள் நோய்தொற்றிலிருந்து எம்மை பாதுகாப்பதுடன் இவை கண்ணுக்கு தெரியாத வைரசுக் கிருமிகளின்பால் தாக்கத்தினையும் செலுத்துகின்றது. இதன் மூலமாக தொற்றுச்சங்கிலியை உடைப்பதுடன், நாம் மட்டுமல்லாது நமது சமுகத்தினையும் பாதுகாப்பாக வைத்திருக்க முடியும். அந்தவகையில் பாடசாலைச்சூழலில் தங்களுக்கான முழுப்பாதுகாப்பும் அதிகாரிகளினால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதனால் நோய் தொற்று அணுகாதவாறு தங்களது கல்வி நடவடிக்கைகளை தடையின்றி முன்னெடுத்துச் செல்ல உறுதி பூணுங்கள்.




**பெற்றோர்களே!**

பாடசாலைக்குள் தங்கள் பிள்ளைகள் பிரவேசிக்கும் வரையான மற்றும் பாடசாலைக்கு வெளியே கழிக்கும் காலப்பகுதி என்பவற்றில் தங்கள் பிள்ளைகளின் பாதுகாப்பில் கரிசனை செலுத்துதல் தங்களின் பாரிய பொறுப்பாகும் என்பதனை உணர்ந்து செயற்படுங்கள். குறிப்பாக பிள்ளைகளின் பாடசாலைக்கான போக்குவரத்தின் போது பாதுகாப்பான ஒழுங்குமுறைகளை ஏற்படுத்திக்கொடுத்தல் பெற்றோரது முக்கிய பொறுப்பாகும்.

அத்துடன் தங்கள் பிள்ளைகளுக்கு ஏதும் சுகயீனம், நோய் அறிகுறிகள் தென்பட்டால் பாடசாலைக்கு அனுப்பாமல் மருத்துவ ஆலோசனையை பெற்றுக்கொண்டு அதன்படி ஒழுகுதல் ஒட்டுமொத்த சமுகத்திற்காக ஆற்ற வேண்டிய தார்மீகக் கடமையாகும்.

**உணர்ந்து நடப்போம்; தடைகளை கடந்து கல்விச் சரித்திரம் படைப்போம்**

சுகாதார திணைக்களத்தின் பரிந்துரைகளுக்கு அமைய பாடசாலைகள் ஆரம்பிப்பதனால் நாமும் சுகாதார விதிமுறைகளை உண்மையான உணர்தலுடன், நம்நலன் மற்றும் பொதுநலன் கருதி கண்டிப்பாக பின்பற்றி கல்வியை தொடர்ந்திடுவோம். மாணவர்களே! பிரச்சினைகள் சுமந்துவரும் வாய்ப்புகளில் கல்விச் சரித்திரம் படைத்திடலாம் வாரீர்!

# சைவ இலக்கியங்களில் மனித விழுமிய மேம்பாடுகள்

உலக மதங்களிலே மிகத் தொன்மையானது சைவம். இது மனித நாகரீகத்தின் ஊற்றுக் கண்ணாகவே தோன்றியது என ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். இதுபோல உலக மொழிகளிலே தொன்மையும் செம்மையும் மிக்கது தமிழ். சைவமும் தமிழும் மலரும் மணமும் போல ஒன்றிலிருந்து ஒன்றைப் பிரிக்க முடியாதவாறு பிணைந்துள்ளது.

சங்க காலம் முதல் சமகாலம் வரை தோன்றிய சைவத் தமிழ் இலக்கியங்கள் எண்ணிலடங்காதவை. அவற்றுள் திருமுறைகளும் மெய்கண்ட சாத்திரங்களும் தனிச்சிறப்பு மிக்கவை.

இச்சைவத் தமிழ் இலக்கியங்களுள் அளவில்லாத மனித விழுமியங்களும் வாழ்வியல் தத்துவங்களும் விரவிக்கிடப்பதை எவரும் மறுக்க முடியாது. இருப்பினும் இன்றைய கால கட்டத்துக்குத் தேவையான சூழ்நிலையை அன்றைய இந்த சைவ இலக்கியங்கள் எவ்வாறு பதிவு செய்துள்ளன, என்பதை எடுத்துக்காட்டுதே இச் சிறு ஆய்வின் நோக்கமாகும்.

இந்தப் பிரபஞ்சத்திலே மனித இனம் மட்டுமே ஆறாவது அறிவைக் கொண்டதாகப் படைக்கப் பட்டுள்ளது. இத்தகைய ஆற்றலைப் பெற்ற மனித இனம் பல வழிகளிலும்




நன்மைகளையே முன்னிலைப் படுத்தி வாழ்ந்து வந்தாலும் மென்மேலும் ஆக்கமும் ஊக்கமும் பெற்றுத் திகழ மனிதனது எண்ணங்கள் விரி வடைய வேண்டும். இதற்கு மனித வளம் உயர்வானதாக இருக்க வேண்டும்.

ஒருநாட்டில் வாழும் மக்களின் கல்வித் தரம், பால் நிலை சமத்துவம், சுற்றுச் சூழல், ஆரோக்கியம் , திட்டமிடல், நடைமுறைப் படுத்தல், ஆகிய அனைத்து தகுதிகளையும் உள்ளடக்கியதே மனித விழுமிய மேம்பாடு எனக் கொள்ளப்படுகிறது. இது ஒரு நாட்டின் பொருளாதாரத்தில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்த வல்லது என்பதும் நிபுணர்கள் கருத்தாகவுள்ளது.

இந்த விழுமிய மேம்பாட்டுக் கூறுகளை சைவ இலக்கியங்களில் காண்போம்.

முதலில் கல்வியை எடுத்துக் கொண்டால், அறிவைத் திறக்கும் திறவு கோலை கல்வி என்றழைக்கிறோம். கல்வி கற்றுக் கொள்வதன் அவசியத்தை வேத விற்பன்னர்களும் , புராண இதிகாசகர்களும் , சங்க இலக்கிய புலவர்களும் வலியுறுத்தியுள்ளனர். இவற்றுள் சிலவற்றை மட்டும் நோக்குவோம்.

தேன் கலந்த திருவாசகத்திலே மணிவாசகப் பெருமான் கல்வியை கற்றுக் கொள்ள வேண்டும். அது பெரிய கடல் போன்றது. அதனை நுகர, நுகர பெரும் பேறும், புகழும் கிடைக்கும் என்று வலியுறுத்துகிறார்.

''கல்வியென்னும் பல்கடல் பிழைத்தும்.......''என்றும் ''கல்லா மனத்து கடைப்பட்ட நாயேனை .....'' என்றும் கல்லாதவர் இவ்வுலகில் கீழான உயிரை விட மோசமானவர். எனவும் குறிப்பிடுகிறார்.

இதுபோலவே தமிழ் மூவாயிரம் திருமூலர் பெருமான் ''கல்லாத மூடரைக் காணவுமாகாதே...''

கல்லாத மூடர்க்கு கல்லாரே நல்லவராம் கல்லாத மூடர் கருத்தறியார்களே....''என கல்லாதவரைப் பழித்து ஒதுக்குகின்றார். ஒருநாட்டில் கற்றவர்கள் அதிகம் இருந்தால் அந்நாடு வறுமையில் இருந்து மீண்டுவிடும். அறிவு தளைத்து ஞானம் மேலோங்கி மனித விழுமியம் மேம்பாடடையும் என்பது இதுபோன்று பல சைவஇக்கியங்கள் வெளிப்படுத்தும் கருத்தாகவுள்ளது.

அடுத்து பால் சமத்துவத்தை நோக்கும் பொழுது ஆண் பெண் சமத்துவம் சரியாக அமைந்தால் அது மனிதவளம், விழுமியம் மேம்பாடடைந்த நாடாக கொள்ளப்படுகிறது. இதையும் சைவ இலக்கியங்களில் பரக்கக் காணமுடிகிறது.

அன்பே வடிவான சிவன் ஆண் பெண் செம்பாதியான அத்த நாரீஸ்வரராக காட்சியளிக்கிறார்

மற்றும் காரைக்கால் அம்மையார் , கோதை ஆண்டாள் போன்றோரின் வாழ்வியலும், வழிவந்த இலக்கிய வடிவங்களும் சிறந்த சான்றாதாரங்களாக அமைந்துள்ளன.

அத்தோடு தன்னை ஒரு பெண்ணாக உருவகித்து மணிவாசகப் பெருமான் பாடும் தன்மை ''தோலும் துகிலும் குழையும் சுருள் தோடும் ..... '' எனத் திரு வாசகத்தில் வெளிப்படுகிறது. எனவே பால் சமத்து வத்திற்கு சைவ இலக்கியங்கள் என்றோ வழி சமைத்த தன்மையினைக் காண முடிகிறது.

அடுத்ததாக சுற்றுச்சூழல் என்ற விடயத்தைப் பார்க்கும் போது, இது அக்காலத்தில் முக்கியம் மிக்கதாய் அமையாத போதும் மனித விழுமிய மேம்பாட்டிற்கு அவசியமானது என்ற வகையில் பாதுகாக்கப் பட்டு வந்த தன்மையினை திருமுறையிலக்கியங்களில் தெளிவாக காண முடிகிறது. குற்றாலம், மதுரை, இராமேஸ்வரம், கோணேஸ்வரம் கேதீச்சரம் பற்றிய பனுவல்களில் பரவலாக காணமுடிகிறது. ''வெண்நிறத்த வரையொடு.......''

''மான் பாய வயலருகே ......'' போன்ற பனுவல்கள் வாயிலாகவும் , குறிப்பாக திரு ஞான சம்பந்தப் பெருமானின் பதிகங்கள் ஊடாகவும் சுற்றுச் சூழல் அழகுகளைக் கண்டின்புறக் கூடியதாகவுள்ளது.

மேலும் சுகாதாரப் பணிகளை எடுத்துக் கொண்டால், சுத்தம் சுகம் தருமென்பாட;கள் தூய்மையற்ற இடங்களை துப்பரவு செய்து சுத்தமாக வைத்திருக்க வேண்டியது எக்காலத்துக்கும் அவசியமான தொன்றாகும். இதனை உழவாரப் படையாளி அப்பர் பெருமான் பல கோயில்களிலும் சுற்றுப் புறங்களிலும் செய்துள்ளார்

''நிலை பெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீ வா......'' எனத்தொடங்கும் அவர் பதிகத்தின் மூலம் தெளியலாம்.

சுத்தத்தையும் சுகாதாரப் பணிகளையும் வழிமுறைகளையும் கடைப்பிடிப்பதன் மூலம் அம்மை, குக்கல், சாஸ், கொரோணா போன்ற கொள்ளை நோய்களில் இருந்து விடுபட்டு எண்பது வயதுவரை வாழ்ந்து காட்டிய அப்பர் பெருமானின் ஆரோக்கிய வாழ்வையும் நமது சைவ இலக்கியங்கள் வெளிப்படுத்தியுள்ளதை வியக்காமல் இருக்க முடியாது.

எந்த நாடும் அபிவிருத்தியில் வெற்றியடைய வேண்டுமாயின் சரியான திட்டமிடலும் முறையான செயற் பாடும் அவசியமாகும். இந்த விழுமிய மேம்பாட்டைக்கூட சைவ இலக்கியங்கள் உணர்த்தத் தவறவில்லை.

திட்டங்கள் சரியான முறையில் தீட்டப் படாததால்தான் நாவுக்கரசர் சமண மதம் சென்றார் பின் அங்கிருந்து சைவத்துக்கு மீண்டார் . வரும்போது மகேந்திர வர்ம பல்லவனையும் சைவராக்கினார்.

திருஞான சம்பந்த பெருமான் கண்ணில் பட்ட ஊர்களிலெல்லாம் தேவாரம் பாடவில்லை திட்டமிட்டு சில ஊர்களையும் சிவ தலங்களையும் மட்டும் பாடினார். இதனால் பல அற்புதங்களை செய்து கூன் பாண்டியனைச் சைவத்துக்கு மாற்றினார்.


எனவே சைவஇலக்கியங்கள் எழுந்த காலத்திலேயே மனித விழுமிய மேம்பாட்டிற்கான கல்வி, பால்சமத்துவம், சுற்றுச் சூழல், சுகாதார வசதிகள். திட்டமிடல், நடைமுறைப் படுத்தல் போன்ற அம்சங்களை முன்னிலைப் படுத்தி யிருந்தன என்பதை திருமூலர், மாணிக்கவாசகர், திருநாவுக்கரசர், திருஞான சம்பந்தர் போன்ற அருளாளர்களின் வாழ்வியலோடு ஆராயப்பட்டுள்ளது.

இவை போன்று சைவ இலக்கியங்களைக் கற்றுணர்ந்தோர் அவற்றில் பொதிந்துள்ள பொக்கிஷங்களை சமகால தேவைகளுக்கேற்ப புதிய கோணங்களில் ஆய்ந்தறிந்து கட்டுரை வரைவது தமிழுக்கும் சைவத்திற்கும் பெருமை தரும்.

**''லோஹா சமஸ்தா சுகினோ பவந்து.. ''**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகத் தமிழ் நெஞ்சங்களுக்கு கல்முனை நெற் மின் பத்திரிகை மூலம் உங்களோடு சேர்ந்து பயணிக்க வருகிறோம். விடயங்களை தெரிந்து கொள்ளல் அல்லது அறிந்து கொள்ளல் என்று வரும்போது இன்றைய நவீன தொடர்பாடல் மிக நிறைந்த ஒரு பெரு வெள நம்கண்முன்னே விரிகிறது. இந்த தரிசனத்தில இலக்கிய உலகம் அதன் தனித்தன்மைகளோடு காலத்தின் தேவைகளுக்கு ஏற்ப அல்லது அவசியம் கருதி புதிய பரிமாணங்களில் விரிவடைந்து செல்கின்றது என்பது விவாதங்களுக்கு அப்பாற்பட்ட ஒன்று. எதுவும் இப்படித்தான் இருத்தல் வேண்டும் என்கின்ற வரையறைகள் (இதனை மரபுரீதியான என்று சொல்லாடலுக்கு உட்படுத்தாமல்) விரும்பியோ விரும்பாமலோ பின்பற்றப்படுவதில்லை அல்லது பேணப்படுவதில்லை என்பது நவீனத்துவ சார்புநிலைக்கு ஒரு புறநடையாகவும் தோன்றலாம். படைப்பிலக்கியமானது விமர்சனங்களுக்கு உட்பட்டும் அவற்றிற்கு எதிர்வினை காட்டியும் ஓர் ஆரோக்கியமான தளத்தில் பயணித்துக்கொண்டிருக்கின்றது என்பதே யதார்த் தம் இதனோடு சேர்ந்து செல்ல இந்த கலம்பகம் பக்கத்திற்கு உங்களை அழைக்கிறோம். உங்களது நல்லாதரவையும் கருத்துக்களையும் நாடி நிற்கிறோம். தொடர்புகளுக்கு: sabasabeshan@yahoo.com




சபாசபேசன்
sabasabeshan@yahoo.com

# மலராத பூக்கள்

திருமதி. யௌவனா வசந்தன்
பாண்டிருப்பு

**இவ்வாரச் சிறுகதை**

தீவ்யா.. வரப்போகிறாள். பல்கலைக்கழக விடுமுறை நாள் நேற்று. மூன்று மாத காலத்தின் பின் இன்று வருகிறாள். பல்கலைக்கழக மாணவி திவ்யா. வழக்கமாக இவளின் வருகைக்காக அப்பா மூர்த்தியின் ஆயத்தங்கள் தடபுடலாக இருக்கும். ரமேஷ் திவ்யாவின் அண்ணன். அவளைக் கூட்டி வரவென அவனே சென்று வருவான்.

திவ்யா வந்ததிலிருந்து அவளுக்குப் பிடித்தமான உணவுகளையே செய்து தள்ளுவாள் தாய் மனோ. தங்கை ரேணுவுடனான குறும்புகள் என ஒவ்வொரு நிகழ்வுகளும் அந்த வீட்டில் இனிமைச் சுவடுகளாகவே நடந்தேறும். இன்றும் அப்படி ஒரு விடுமுறை நாள்தான் திவ்யாவுக்கு. மூன்று மாத காலத்தின் பின். இவளின் வருகைக்காக வீட்டாரின் தடபுடலான ஆயத்தங்கள். அண்ணன் தான் கூட்டிவரச் சென்றுள்ளான்.

சைரன் ஒலி மூர்த்தியின் சிந்தனையைத் திருப்பியது. அடிவயிறுவரை இதயம் சென்று வர, பாத ரேகைகளின் வழி ஊசியேற்றுமளவு வலியுணர்ந்து தட்டுத்தடுமாறி எழுந்து விரைந்து வந்தார் வாயிலருகே. வீங்கிய முகத்துடன் ரமேஷ் வந்தேற, அம்பியுலன்ஸ் வண்டியை சூழ்ந்து கொண்ட ஓலங்களுக்கு மத்தியில், பெட்டிக்குள் வைரமாய் இறக்கப்பட்டாள் திவ்யா

விடுமுறைக்காய் வீடு செல்லவென இரவு 9.00 மணிக்கு பஸ்ஸிற்காய் காத்து நின்றவள், வேனொன்றில் வந்த சிலரால் கடத்தப்பட்டு சிதைக்கப்பட்டுள்ளாள். வேனிலிருந்து தப்பி ஓடிய போது பஸ்ஸொன்றில் மோதுண்டு அவ்விடத்திலேயே அவளின் உயிர் பிரிந்திருக்கின்றது. போலிஸாரின் சம்பிரதாயங்களின் பின்னர் அண்ணன் அழைத்து வர, இப்போது அவளின் வீட்டில் வெற்றுடலாய் கிடத்தப்பட்டுள்ளாள்.

உறவுகளும், நட்புகளும் என அவளுக்காய் ஊர் மொத்தமுமே அழுதுகொட்டிவிட்டது. தலைமகனாய் தனது கடைமைகளை மனைவி தீபாவின் உதவியோடு முடித்து பத்திரமாக அன்றைய நாளே திவ்யாவை வழியனுப்பி வைத்தான் ரமேஷ். ஓரிரு நாட்கள் திவ்யாவின் இழப்பு பற்றிய நினைவுகளோடு மரணவீடு கடந்து விட்டது. எட்டு நாட்களின் பின்னர் உறவுகளும் மெல்ல மெல்ல நடைமுறை வாழ்வுக்கு திரும்பிக் கொண்டிருந்தனர். திவ்யாவின் வீட்டு உறவுகளுக்கு மட்டுமே மீள முடியாத ஆழமாகவே அவளின் இழப்பு இருந்தது. வெறித்த பார்வையோடு மட்டுமே இந்த நாட்களைக் கடந்து கொண்டிருந்தாள் தாய் மனோ. அதிர்வலையிலிருந்து அவளால் மீள முடியவில்லை. அவளது முழுச் செயற்பாடுகளும் தீபாவையும், ரேணுவையுமே தங்கியிருந்தன. தாயின் இந்நிலை கண்டு தங்கையின் இழப்பு வலிக்கு மேல் வலியை ஏற்றிக் கொண்டிருந்தான் ரமேஷ். ரேணுவுக்காகவெனினும் தாய், தந்தையரை மீட்டெடுக்க வேண்டிய கட்டாயத்திலிருந்தான் அவன்.

கதிரையில் சாய்ந்தவாறு இருந்தவன் ஏதோ உள்ளுணர்வு கூற தந்தையை தேடி மேல் அறைக்குள் நுழைந்தான். அப்பொழுதுதான் அவன் அதைக் கண்டான். மூர்த்தியின் கட்டில் தலையணையின் மேல் ஓர் கடிதம். கைகளிலும், நெஞ்சிலும் மெல்ல நடுக்கம் பரவ, எடுத்துக் கடிதத்தை விரித்துக் கொண்டான்.

என் மகனுக்கு

ரமேஷ். இந்தக் கடிதம் நிச்சயம் உன் கைகளில்தான் கிடைக்கும் என்ற என் உள்மன உந்துதலாலேயே இதனை எழுதுகிறேன்.

(மிகுதி அடுத்தவாரம்)

# முயற்குட்டி

எங்கள் சின்ன மகளின்
அற்புதங்களால் நிறைந்திருக்கிறது
வீடு அவள் வந்து சேர்ந்த பின்னர்
பலநூறு வருடங்களாக
இசைக்கப்படாத
புத்தம் புதிய மெட்டுக்களில்
வீடே பாடிக்கொண்டிருக்கின்றது
முன்னெப்போதுமில்லாதபடி
முற்றத்தில் பூக்கள் மலர்ந்து
சொரிகின்றன.

ஓய்வற்றபடியே இருக்கின்றன
அவள் கை கால்கள்
தெளிந்த நீருள் ஓடிக் குதூகலிக்கும்
வண்ண மீன் குஞ்சுபோலாகின்றாள்
மறுகணமே
தோட்டத்து மலர்களிடை
படபடத்து சிறகடிக்கும்
வண்ணத்துப் பூச்சியாகின்றாள்.

அவள் சுவைத்து மிஞ்சிய சோற்றுப்
பருக்கைகள்
வாழ்வின் அத்தனை கசப்புக்களும்
நீங்கும் படியாய்
அமிர்தமாய் தித்திக்கின்றன.

அவளின் மழலைமொழியின்
சங்கிதத்தில்
உயிர் மெல்லத் துளிர்கிறது
அவள தரும் கோடிப்பெறுமதிமிக்க
ஈர முத்தங்களால்
மனதின் தீக்காயங்கள்
ஆறிவருகின்றன
காலம் நறுக்கிய சிறகுகள்
மெல்ல முளைக்கின்றன.

ஒரு முயற்குட்டியின்
அப்பாவித்தனங்களோடும்
ஒரு குருவிக் குஞ்சின்
மென்பரிசத்தோடும்
எந்தப் பாரச் சுமையுமின்றி
மடிக்குள் உறங்கிப் போகிறாள்.

எனினும் நான் பயப்படுகின்றேன்.
இந்த உலகின் சூட்சுமங்களை
அவள் ஒருநாள் அறிய நேருமே
என்றெண்ணும்போதும் வாழ்வின்
மாயப்பொழுதுகளை அவள்
கடக்க நேருமே என்றுணரும் போதும்.

-சிவ வரதராஜன்-




சஞ்சீவி சிவகுமார், வே.அரவிந்தன்
sariththiramkalmunai@gmail.com

# நற்பிட்டிமுனையின் வரலாற்றுப் பின்புலத்தில் கல்வி முன்னெடுப்புக்கள்

கிழக்கிலங்கையின் பூர்வீக சரித்திரம் பற்றி ஆராயும் போது அதில் நற்பிட்டிமுனை முக்கியமிக்க ஆட்சிப் படை விளங்கிய இடம் என்பது தெளிவு. ஆயினும் தமது இருப்பை முறையாகப் பதிவு செய்வதிலும் ஆதாரங்களை காப்பதிலும் அக்கறையின்றி இருந்தமையால் அதனை இலக்கிய ஆதாரங்களில் முழுமையாக நிலைப்படுத்த முடியவில்லை. நற்பிட்டிமுனையின் வரலாறு பற்றி மட்டக்களப்பின் வரலாறு கூறும் நூல்களில் உள்ள சிறு குறிப்புக்களைத் தவிர யாதொரு கச்சிதமான தெளிவான ஆவணங்களும் காக்கப்படவில்லை என்பதே உண்மை. வன்னிமை ஆண்ட இடம் என்பதற்கு சுற்றயல் கிராம ஆலய நிருவகிப்புக்களில் நற்பிட்டிமுனை வன்னிமை கோத்திரத்தாரின் தலைமைத்துவப் பங்கேற்பு இருப்பது மட்டுமே இப்போதைக்கு இருக்கின்ற சான்றாதாரமாகக் காணப்படுகிறது. இந்த அடித்தளத்தில் நின்று நற்பிட்டிமுனையின் வரலாற்றுக்கால கல்விப் பின்புலம் பற்றி நோக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**வரலாற்று முகப்பு**

நற்பிட்டிமுனை என்ற பெயர்வழி பற்றிப் பல செவிவழி முடிவுகளும் கருத்துக்களும் கூறப்படுகின்றன. சுற்றியுள்ள பட்டிப்பளை ஆற்றின் கிளை மற்றும் வயல்காணிகளை ஊடறுத்து நா[illegible] என்பதாக நற்பிட்டிமுனை என்ற [illegible] வழங்கப்பட்டது எனவும் அதுவே நாப்பிட்டி என்று வழங்கப்பட்டு வந்துள்ளதாகவும் நூலாதாரங்கள் மூலம் தெளியலாம்.

புட்டி என்பது திடலான உயர்ந்த நிலம் எனும் பொருள் மனங்கொள்ளத்தக்கது . நாப்புட்டி என்ற பெயர் வழங்கப்பட்டமையை பண்டைய வரலாற்று நூல்கள் குறிப்பிடுகின்றன. (மட்டக்களப்பு மான்மிகம், பக்கம் 24) இக்காலங்களில் நாலுபடைகள் இப்பகுதியில் நிலை கொண்டிருந்தமையால் நாற்படைமுனை என்ற பெயர் வழங்கப்பட்டதாகவும் அதுவே திரிந்து நற்பிட்டிமுனை என வந்ததாகவும் சிலர் கருதுவர்.

[illegible] வரலாற்றுக் காலத்தின் தொடக்கத்திலிருந்து நற்பிட்டிமுனை திக்கதிபரின் ஆட்சித்தலமாக இருந்தது. கூத்திகனதும், அவன் மகன் சேனனினதும் ஆட்சிக்காலங்களில் இராசாக்கள் கூடும் இடங்களில் ஒன்றாக இப்பதி விளங்கியதாக மட்டக்களப்பு மான்மியம் (பக். 24) குறிப்பிடுகின்றது. இது கி.மு 236-214 காலப்பகுதியாகும் என வரையறை செய்வார் கவிக்கோ வெல்லவூர்க் கோபால் (மட்டக்களப்புத் தேசம்,பக். 05). ஆகவே கி.மு மூன்றாம் நூற்றாண்டுக்கு முற்பட்ட ஆட்சித்தள மற்றும் குடியியல் வரலாறு கொண்ட பழம்பெரும் பதியாக நற்பிட்டிமுனை விளங்கியமை உறுதியாகின்றது.

(மிகுதி அடுத்த வாரம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கல்முனை மாநகரசபை உறுப்பினர் ராஜன் கூறுகிறார்

# ஒற்றுமையின்மையே எமது அடிப்படைப்பலவீனம்

**கல்முனை வடக்கு பிரதேச செயலக தரமுயர்த்தலின் பின்னடைவுக்கு அடிப்படைக்காரணம் எமது தமிழ் அரசியல்வாதிகளின் ஒற்றுமையின்மையே. அதனை ஹரீஸ் போன்ற இனவாதிகள் சூட்சுமமாகப்பயன்படுத்தி இழுத்தடித்து வருகின்றனர். அவ்வளவுதான். இவ்வாறு கல்முனை மாநகரசபையின் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் உறுப்பினரும் பிரபல சமுகசெயற்பாட்டாள ருமான சந்திரசேகரம்ராஜன் கூறினார்.**

**கல்முனைநெற் மின்னிதழின் கன்னிஇதழுக்காக மாநகரசபையின் உறுப்பினர் என்பதற்கு அப்பால் உண்ணாவிரதமிருந்து பொதுப்பணியில் தன்னை முழுமையாகஈடுபடுத்தி சொந்தநிதியையும் பயன்படுத்தி மக்கள் சேவையீகலீடுபட்டுவரும் திரு.ராஜன் அவர்களை நேர்காணல் செய்தோம். கல்முனை வடக்கு பிரதேசசெயலக தரமுயர்தலுக்காக உண்ணாவிரதமிருந்த உறுப்பினர் என்றவகையில் அந்தவிவகாரம் இந்தளவு பின்னடைவுக்கு காரணமென்ன என்று கேட்டபோது அவர் மேற்கண்டவாறு பதிலளித்தார். மேலும் நிதிஅதிகாரம் கணக்காளர் தேவை. மற்றும்படி இருக்கின்ற எல்லைகளோடு பிரதேசசெயலகத்தை இருப்பதுபோன்று இயங்கவிட்டாலே போதுமானது என்றும் கூறினார். அவருடனான நேர்காணலை இங்கு தருகிறோம்.**

**நேர்கண்டவர்: வேதசகா**

**Q கேள்வி: கடந்த தேர்தலில் கல்முனைத்தொகுதிதமிழ் மக்கள் தங்கள் கட்சியைவிட்டு கருணா அம்மான் அணியின் பின்னால் அணிதிரண்டமைக்கு காரணம் என்னவென்று கருதுகிறீர்கள்?**

பதில்: சுருக்கமாகக்கூறினால் ஒருசிலரின் சுயநல அரசியலுக்காக கல்முனை தமிழ்மக்கள் அடகுவைக்கப்பட்டனர் என்று கூறலாம். கல்முனை வடக்கு பிரதேசசெயலக தரமுயர்த்தல் என்ற விடயத்தை துரும்புச்சீட்டாக வைத்துக்கொண்டு இறக்குமதி செய்யப்பட்டவரை வைத்து ஆடிய ஆட்டம்தான் அது. பசில் மஹிந்த ஆகியோரும் தேர்தல் முடிந்தகையோடு தரமுயர்த்துவோம் என்று கூறியதை நம்பி அவர்களது ஏஜண்ட கருணாவுக்கு பின்னால் அலைந்தனர். கருணாவும் செல்லுமிடமெல்லாம் அதே உறுதிமொழியை வழங்கினார். நடந்ததென்ன?

இன்று அவர்கள் அனைவரும் கையறுநிலையிலுள்ளனர். அநியாயமாக அந்த மாயையில் சிக்கி ஏமாற்றப்பட்டுள்ளனர். ஏமாந்துபோய் மௌனியாகியுள்ளனர். உண்மையில் இவ்விவகாரத்தில் த.தே.கூட்டமைப்பை விட யாராவது கூடுதல் அக்கறையுடன் நகர்த்திஇருப்பார்கள் என்றால் அது பச்சைப்பொய். காலம்பதில் சொல்லும். என்றார்.

**Q கேள்வி: எதிர்வரும் கிழக்குமாகாணசபைத் தேர்தலில் போட்டியிடவிருப்பதாக அறிகிறோம். அதுஉண்மையா?**

பதில்: உண்மை.அதேவேளை மக்களோடு மக்களாக நின்று என்னைவிட சேவை செய்பவர்கள் முன்வந்தால் நான் விட்டுக்கொடுக்கவும் தயங்கமாட்டேன்.

கேள்வி: கல்முனை கொரோனா முடக்கம் திருப்தியளிக்கின்றதா?

பதில்: இதற்காக நானும் சாதுவும் அம்பாறை அரசஅதிபர் வரை சென்று மக்களுக்காகப் பேசியிருந்தோம். முடக்கத்தைப்பாருங்கள். அதில் பெரும் உண்மை மீண்டுமொரு உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது. என்னவென்றால் கல்முனைக்குரியவர்கள் யார் கல்முனைக்குடிக்குரியவர்கள் யார் என்பதை துல்லியமாக எடுத்துக்காட்டியுள்ளது.

முடக்கப்பட்ட 11 பிரிவுகளில் 07 தமிழ்ப்பிரிவுகள் 04முஸ்லிம்பிரிவுகள். இந்த 7தமிழ்ப்பிரிவுகளும்கல்முனை தரவைப்பிள்ளையார் ஆலயத்தில் ஆரம்பமாகி வாடிவீட்டுவீதிவரை உள்ளது. எனவே கல்முனையில் பூர்வீகமாக வாழ்ந்துவருபவர்கள் தமிழ்மக்களே என்பது இக்கொரோனா வேளையிலும் உறுதிப்படுத்தப்பட்டிருப்பது மகிழ்ச்சியாயிருக்கிறது. இனவாதிகளுக்கு இது சமர்ப்பணம்.

**Q கேள்வி: கல்முனையிலிருந்து ஒருவாரமின்னிதழ் உதயமாகின்கிறது என்ற செய்தியை நீங்கள் எவ்வாறு நோக்குகிறீர்கள்?**

பதில்: உண்மையிலே இவ்வரலாற்று பதிவிலே நானும் இடம்பெறுவதையிட்டு அகமகிழ்வடைகிறேன். வடக்கிலே உதயன் வலம்புரி காலைக்கதிர் ... என்று பல பிராந்தியபத்திரிகைகள் வெற்றிகரமாக வெளிவருகின்றன.வடக்கு மண்ணின் பிரச்சினைகளை அவலங்களை சிறப்பாக அவைவெளிப்படுத்திநிற்கின்றன கிழக்கில் அவ்வப்போது ஒருசில பத்திரிகைகள் தலைகாட்டிவிட்டு மறைந்துபோகின்றன. எதுவுமே நிலைத்திருக்கவில்லை.

ஆனால் இந்தநவீனயுகத்தில் சமகாலத்திற்கேற்ப மின்னிதழை பொதுவெளியில் கல்முனைநெற் ஊடகக்குழுமம் தவழவிடுவதென்பது பாராட்டுக்குரியது. அதுவும் சிறந்த பிரதமஆசிரியர் உள்ளிட்ட ஆசிரியர்குழாம் மின்னிதழுக்கு மேலும் வலுச்சேர்க்கும் என்பதில் ஐயமில்லை. கிழக்கு மக்களின் நியாயமான உணர்வலைகள் சமுகஅவலங்கள் கலைகலாசார அம்சங்கள் வெளிவராதஉண்மைகள் போன்றவற்றை வெளிப்படுத்தவேண்டும். தொடர்ந்து மென்மேலும் சிறந்து பயணிக்கவேண்டுமென வாழ்த்துகிறேன்.



# இனவாதத்தின் உச்சக்கட்டம் தாண்டவமாடுகிறது!

கல்முனை மாநகரசபை உறுப்பினர் முபீத் சாட்டை

**கோத்தபாய அரசு தனிச்சிங்கள மக்களின் ஆதரவுடன் வந்தது என்ற காரணத்தைவைத்து சிறுபான்மையினர்மீது எந்தக்கரிசனையையும் காட்டவில்லை. இன்று இலங்கையில் இனவாதத்தின் உச்சக்கட்டம் தாண்டவமாடுகிறது. இதற்கு அப்பால் அவர்களுக்கு இறங்குமுகம்தான். இவ்வாறு கல்முனை மாநகரசபையின் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் உறுப்பினரும் கட்சியின் கல்முனைத்தொகுதி அமைப்பாளருமான சீ.எம்.முபீத் கூறினார். கல்முனைநெற் மின்னிதழின் கன்னிஇதழுக்காக மாநகரசபையின் சிரேஸ்ட உறுப்பினர் என்றவகையில் ஜனாப் முபீத் அவர்களை நேர்காணல் செய்தோம். அதன்போது கருத்துரைக்கையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். கல்முனை மாநகரசபைக்கு 2006இல்சுயேச்சை அணியிலும் 2011இல் வெற்றிலை அணியிலும் 2018இல் அ.இ.ம.காங்கிரஸ் அணியிலும்போட்டியிட்டுதொடர்ச்சியாக3தடவைஉறுப்பினராக 11வருடகால நீண்ட சேவைக்காலத்தையுடையவர் ஜனாப் முபீத்.அவருடனான நேர்கா ணலை இங்கு தருகிறோம்.**

**Q சமகால அரசாங்கம் சிறுபான்மையினரின் பிரச்சினையை தீர்த்துவைக்கும் என்று நம்புகிறீர்களா?**

பதில்: ஒருபோதும் இல்லை. சிங்களமக்களால் தொடர்ந்துவரவேண்டும் என்பதற்காக சஹ்ரான் அடிப்படைவாதிகள் என சிங்கள மக்களிடம் கருத்;தை விதைத்து இனவாதத்தை வளர்த்து வருகிறது இந்த அரசாங்கம். சிங்களமக்களில் பெரும்பாலானோர்சமுக வலைத்தளங்களைப்பார்ப்பதில்லை.மாறாக அரசவானாலி தொலைக்காட்சிகளை மட்டுமே பார்ப்பவர்கள். அவர்கள் அவற்றை நம்புகிறார்கள்.

சிறுபான்மையினர்மீது கரிசனை கொண்;டதாகக்கொண்ட ரணில் சஜித் அணியினர் கூட சிங்கள மக்களை வெல்லவேண்டும் என்பதற்காக அவர்களும் இன்று இனவாதம் பேசத்தொடங்கியுள்ளனர்.

வரப்போகின்ற தேர்தல்களில் இந்த இருசாராரும்சிங்கள மக்களின்வாக்குகளைப் பிரிக்கப்போகின்றனர்.அந்த வேளையில் இருசாராருக்கும் சிறுபான்மையினரின் ஆதரவு கட்டாயம் தேவைப்படும். அதாவது வருகின்ற ஆட்சியை தீர்மானிக்கப்போவது சிறுபான்மையினரே. அப்போது எமது பிரச்சினைகளையிட்டுபேசி தீர்வு காணலாம். தற்போது பேசிப் பயனில்லை.

**Q கல்முனை மாநகரில் எரியும் பிரச்சினையாக இருப்பது கல்முனை வடக்கு பிரதேசசெயலக தரமுயர்த்தல் விவகாரம். இதனை தாங்கள் எந்தக்கோணத்தில் பார்க்கிறீர்கள்?**

பதில்: உண்மையில் இதுவொரு விவகாரமே இல்லை.இது புதிய விடயமல்ல. 30வருடங்களுக்கு முன்பே உருவாக்கப்பட்டது இந்த கல்முனை வடக்குபிரதேச செயலகம். இது தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கை.

கட்டாயம் இது தரமுயர்த்தப்படவேண்டும் என்பதில் எமது அஇமகா கட்சியும் தலைவர்றிசாட்டும்நானும் 100வீதம் உறுதியாயிருக்கிறோம்.அங்கு கணக்காளர் நியமிக்கபடுவதிலும் எந்த ஆட்சேபனையுமில்லை. ஆனால் இருசிவில் சமுகமும் இணைந்து எல்லை நிர்ணயத்தை பரஸ்பரம் புரிந்துணர்வுடன் செய்துகொள்ளவேண்டும்.

அதைவிடுத்து அரசியல்வாதிகளிடம் விட்டால் அவர்கள் இதனை தேர்தல் காலத்தில் ஊதிப்பெருப்பித்து இனவாதத்தை விதைத்து மக்களைப்பிரித்து ஆட்சிபீடமேற உதவுமே தவிர வேறெந்தபயனுமில்லை.

**Q கேள்வி: சமகாலத்தில் பேசுபொருளாக ஜனாசா எரிப்பு விவகாரம் உச்சத்திலிருந்தது. அதுபற்றியதங்கள் கருத்தென்ன?**

பதில்: உலகசுகாதார தாபனமே அனுமதியளித்த முஸ்லிம்களின் அடிப்படை உரிமை விடயத்தை இன்று பேசுபொருளாக்கி பழிவாங்கலைச்செய்கிறது இந்த அரசாங்கம். முஸ்லிம்கள் ஆட்சியமைக்க வாக்களிக்கவில்லைஎன்ற ஒரேயொரு குற்றத்திற்காக பழிவாங்கும் செயற்பாடு அரங்கேறுகிறது அவ்வளவுதான்.

உலகில் 190 நாடுகளில் ஜனாசாக்களை அடக்க அனுமதியுண்டு என்றால் இலங்கை மட்டும் ஏன் விதிவிலக்காகவேண்டும்? ஜனாதிபதி பிரதமருக்கு ஒருவேளை ஜனாசாக்களை அடக்க விருப்பமிருந்தாலும் பெரும்பான்மையின ஒரு சில இனவாதிகளை திருப்திப்படுத்தவே அரசு இந்நாடகத்தை ஆடுகிறது.

**Q கேள்வி: கொரோனாவின் இரண்டாம் அலைக்கான அரசின் கட்டுப்பாடு திருப்தியளிக்கின்றதா?**

பதில்: திருப்தியில்லை. முதலாம் அலைக்கு காட்டிய அக்கறை இரண்டாம் அலைக்கு காட்டவில்லை. உலகநாடுகளிடம் நிதி பெறுவதற்கு நோய் வேண்டும்.

கொரோனா தொற்று ஏற்பட்ட ஒருவரின் மருத்துவச்செலவுக்காக ஒரு தலைக்கு 4000டொலர் வெளிநாட்டிலிருந்து கிடைக்கிறது. அதற்காக இந்த நோயை பிச்சைக்காரனின் புண் போன்று தொடர்ச்சியாக வைத்திருப்பர்.மக்கள் பலிக்கடாவாகப்போகின்றனர்.

நன்றி. கல்முனைநெற் மின்னிதழின் முதல் இதழுக்கு என்னை நேர்கண்டமைக்காக மனமார்ந்த நன்றிசெலுத்துவதோடு இனமதபேதமற்று இவ்விதழ் இவ்வாறு தொடர்ந்து வளர வாழ்த்துகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறந்திருக்கும் புதுவருடத்தின் புது வரவு இந்த வார இதழ். இன்று முதல் உங்களுடன் இன்னொரு தோழியாய் உறவாட வருகின்றது.இந்தப் பெண்கள் பகுதியில் மற்றையவர்களுடன் உங்கள் எண்ணங்களை வாழ்வின் வண்ணங்களை வாழக் கிடைத்திருக்கும் இந்த அழகிய வாழக்கையை அதன் ஏற்ற இறக்கங்களை வாழ்வின் கொண்டாட்டங்களை அவலங்களை பெண்களின் உயர்விற்கான வழிமுறைகளை அடிநாதங்களை கலைகளை பெண்களின் பாதையில் கல்வி தரும் அர்த்தங்களை அதன் உயர்வினை தம் கால்களில் நின்றாடும் பெண்மையை அதன் உச்சத்தை எம் சமூகத்தை எமை அசத்திடும் இயற்கையை இன்று சந்திக்க நேரும் பிரச்சினைகளை அதன் தீர்வுகளை நம் சமூகத்தை அதன் மீது செயற்படும் தாக்கங்;களை இப்படியே பலப்பல விடயங்களை நாம் இப் பெண்கள் பகுதி மூலம் பகிர்ந்து கொள்ள இருக்கின்றோம்.

உங்களின் ஆக்கங்கள் கருத்துக்கள் விமர்சனங்களை எங்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள் இப்பகுதி உங்களின் ஆக்கங்களுடன் தொடர களம் அமைக்கப்படுகின்றது.

இப் பொங்கல் நன்நாளில் இல்லங்களும் உள்ளங்களும் தித்திப்பாகப் பொங்கவும் உங்களின் வாழ்விலும் தித்திப்புத் தொடரவும் அனைவருக்கும் இனிய பொங்கல் நல் வாழ்த்துக்கள்.

# மங்கையர் மகுடம்

Dr.புஸ்ப்பலதா லோகநாதன், ஜெனிற்றா மோகன்
nilanthiniravichandran@gmail.com,
jenikabishan@gmail.

## அன்பினாலாகும் இன்பம்

பிறர் நலம் காத்திட
அன்பு கோலம் பூண்டிடுவோம்
விழுந்தவன் மீண்டும் எழுந்திட
அன்பு கரம் நீட்டிடுவோம்

முரண்பாடுகளை முடக்கிடவே
அன்பு எனும் ஆயுதம் ஏந்திடுவோம்
புனிதர்களாய் வாழ்ந்து காட்டிய
அவர்களின் நல்வழி சென்றிடுவோம்

பெற்றோரிடமும் மற்றோரிடமும்
அன்பு எனும் தீபம் ஏற்றிடுவோம்
அனைவரும் பாரினில் போற்றிடவே
அழகான வாழ்வு வாழ்ந்திடுவோம்

அன்பினாலாகும் இன்பம் இன்று
அறிந்து கொண்ட அனைவரும்
அன்பு மழையில் நனைந்தே
இன்ப உலகம் காண்போம்

மனங்களில் அன்பொளி ஏற்றிடவே
மறைந்திடும் மனங்களில் துன்பம்
எல்லாமே
அன்புடையோர் அவனியில் படைத்த
அற்புதங்கள் எத்தனையோ கண்
டோம்
அஹிம்சை வழி நின்ற மகான்
மகாத்மா காந்தியை மறந்திடலாமா?

உலகம் போற்றும் அன்பின் அவதாரம்
அன்னை தெரேசாவை மறந்திடலா
மா?

மகாபாரதம் சொல்லும் செஞ்சோற்று
கடன் தீர்த்த கர்ணனின் கடமை சார்
அன்பினை மறந்திடலாமா?
இராமனுடன் வனவாசம் சென்ற
இலக்குமணன் அன்பினை மறந்திட
லாமா?

புறா மீது அன்பு காட்டிய
சிபிச்சக்கரவர்த்தியை மறந்திடலாமா?
ஏன்
தரணி போற்றும் தாயின் அன்பினை
பாரினில் யாரும் மறந்திடலாமா?

அன்பினால் துன்பம் களைவோம்
பண்பினால் பகை மறப்போம்
அன்பினால் அவனி காப்போம்
பாசத்தினால் பதக்கம் அணிவோம்

நேசத்தினால் நெஞ்சில் நிறைவோம்
கணகளினால் கருணை காட்டுவோம்
அன்பின் வடிவங்கள் அத்தனையும்
காண்போம்
பாரினில் என்றும் இன்பமாய் வாழ்ந்
திடுவோம்

## தனித்துவம்


தனித்துவம்
எழில் இயற்கையின்
அழகே மனிதன் தான்
யதார்த்தங்களில் ஆணாதிக்கம்
பெண்ணடிமை எனக்
கூவுவதில் அர்த்தமேயில்லை
அடிமைப் பெண்கள்
உடன் கட்டை ஏறுவோர்
யாருமேயில்லை
சர்ந்தர்ப்பங்களும்
வாய்ப்புகளும் எம்முன்னே
பெண்ணின் சிறகினை
விரித்து விட்ட அப்பாக்களும்
வான் வெளியைக் காட்டி
பறக்கலாம் எனச் சொன்ன சகோதரனும்
வெளி அனைத்தும் உன் பறப்பிற்குத்தான்
ஊக்குவித்த கணவனும்
ஆண்கள் தான்
உனைத் தயார் படுத்திக் கொள்
கல்வியின் கனதியை தொடு
முடியும் என்பதற்கும்-அப்பால்
முயற்சி செய்
வியர்வையை வாசனையாக்கு
வாய்ப்புகளை உருவாக்கிக் கொள்
முடியாதென்றேதுமில்லை
போருக்கு அப்பாலும்
தனித்து தனை உயர்த்தி
குடும்பத்தை தளைப்பித்த
பெண்கள் வாழும் நாடு
காணாமலாக்கப்பட்ட கணவன்
நிழலோ? நிஜமோ?
எனத் தெரியாது
நெற்றியில் பொட்டிட கை நடுங்கும்
பெண்கள்- இங்கும் வாழ்கிறார்கள்
தனித்துத் தலைவியாய்
தைரியப்படுத்திக் கொள்
உரத்துப் பேசு எதிரொலிகளை
ஊடறு தொடரும் பாதை
உனக்காகத் தான்

- மலரா-

## மருந்தின் மாயம்

ஒரு கிராமத்தில் ரவி என்ற விவசாயி வாழ்ந்து வந்தார். அவரது மனைவி செல்வியும் கணேஸ் முகேஸ் ரமேஸ் என்ற மூன்று மகன்களும் அவருடன் வாழ்ந்து வந்தனர்.அந்தக் குடும்பம் மிகவும் ஏழ்மையான குடும்பம். ஒரு நாள் செல்வி சில வீடுகளுக்கு சென்று பாத்திரம் கழுவிக் கொடுத்ததால் கொஞ்சம் பணம் கிடைத்தது.

வயலுக்கு சென்று வந்த ரவியிடம் பணத்தைக் கொடுத்து நீங்கள் சந்தைக்கு சென்று கோழிக் குஞ்சுகள் வாங்கி வாருங்கள் அதை வளர்த்து இறைச்சிகளையும் விற்று முட்டைகளையும் விற்று அடைகாத்த குஞ்சுகளையும் விற்று பணம் சம்பாதிக்கலாம் என்று மனைவி கூறினாள். அதற்கு ரவி உன்னிடம் எப்படி இவ்வளவு பணம் வந்தது என்று கேட்டான்.நடந்ததை மனைவி கூறினாள்.என்ன நடந்தாலும் நீ இவ்வாறு செய்திருக்கக் கூடாது என ரவி கூறிவிட்டு நடந்தது நடந்து விட்டது. சரி எனக் கூறி ரவி சந்தைக்கு சென்று கோழிக் குஞ்சுகளை வாங்கி வர சென்றான் மனைவி வரும் போது கோழிக்கு தீனும் வாங்கி வாருங்கள் என்று கூறினாள். சரி என்று கூறிவிட்டு ரவி சந்தைக்கு சென்றான். வரும் வழியில் ஒரு முனிவர் தோன்றி ரவியிடம் ஒரு மருந்தைக் கொடுத்து இதை உன் கோழிகளுக்கு உணவுடன் கலந்து வை என்று கூறினார். ரவி அதனை வாங்கி விட்டு நிமிர்ந்தான் முனிவர் மறைந்து விட்டார். வீட்டிற்கு சென்ற ரவி கோழிகளுக்கு உணவில் அந்த மருந்தை அதிகமாகக் கலந்து வைத்தான். அடுத்த நாள் அதிகாலையிலே கோழிகள் கொக்கரித்தும் சேவல்கள் கூவியும் கேட்டன. என்ன அதிசயம் எல்லா கோழிகளும் ஒரு நாளிலே பெரிதாக வளர்ந்து முட்டைகளும் இட்டிருந்தன. உடனடியாக ஒரு வாளியைக் கொண்டு வந்து எல்லா முட்டைகளையும் எடுத்தான். இவ்வாறு ஒவ்வொரு நாளும் கோழிகள் முட்டை இட்டன. இவர்கள் முட்டைகளை விற்று பணம் பெற்று சந்தோசமாக வாழ்ந்து வந்தார்கள்.



## வாழ்க்கை தரும் பாடங்கள்

- ஒரு முறை பேச இரு முறை யோசி.
- எதுவும் சில காலம்தான்
- ஆசைப்படுவதை மறந்து விடு ஆனால் ஆசைப்பட்டதை மறந்து விடாதே
- வெற்றி எல்லோருக்கும் கிடைப்பதில்லை ஆனால் வெற்றி பெறும் தகுதி எல்லோருக்கும் உண்டு
- உன்னை யாராலும் தோற்கடிக்க முடியாது உன் நம்பிக்கையில் நீ தோற்கும் வரை
- சுமைகள் கண்டு துவண்டு விடாதே உன்னை தாங்கும் பூமியே உன் காலடியில்தான் இருக்கிறது.
- சிந்தனை செய் செய்ய நினைப்பதை செய்
- யாரையும் நம்பாதே உன்னை மட்டு நம்பு
- விழாமல் வாழ்ந்தேன் என்பது பெருமை அல்ல விழுந்தாலும் எழுந்தேன் என்பது பெருமை
- வாழ்வது ஒரே ஒரு முறை அதை உனக்காக வாழ்




## விடுகதைகள்

01. வெட்ட வெட்ட நான் புதுசாகிக் கொண்டே இருப்பேன் . இதுதான் என் குணம் தம்பி நீ எதை நினைத்தாலும் அதை நான் எழுதுவேன் நான் யார்?
பென்சில்

02.சிவப்பு பைக்குள் மஞ்சள் முத்து அது என்ன?
செத்தல் மிளகாய்

03.என்னை வெட்டினால் பல பேரின் தாகம் தீர்ப்பேன் நான் யார்?
இளநீர்

04.ஆடிப்பாடி வருவான் ஆடிப்பாடி போவான் அவன் யார்?
கடல் அலை

05.பச்சை வீட்டிற்கு சிவப்பு வாசல் அது என்ன?
கிளி.

06.நான் வீட்டைக் காப்பேன் கடிக்கவும் மாட்டேன் குரைக்கவும் மாட்டேன் நான் யார்?
பூட்டு

07.என் வெளித்தோற்றம் கரடு முரடு உள்ளே மென்மை நான் யார்?
பலாப்பழம்.

08.மரமாம் மரத்துக்கு மேல் பழமாம் பழத்துக்கு மேல் மரமாம் அது என்ன?
அன்னாசி.

09.உடம்பெல்லாம் பல் கொண்ட ஒருத்திக்கு பல் இல்லையாம் அது என்ன?
சீப்பு

10.உரித்த கோழி ஊருக்கு போகுது அது என்ன?
தேங்காய்.

11.அப்பா பணத்தை எண்ண முடியாது அம்மா புடவையை மடிக்க முடியாது அது என்ன?
நட்சத்திரங்கள் வானம்.

12.ஒரே பெட்டியில் இரண்டு தைலம் அது என்ன?
முட்டை

13.பெட்டியைத்திறந்ததும் கிருஸ்ணன் பிறந்தான் அது என்ன?
வேர்க்கடலை.

14.ஊருக்கெல்லாம் ஒரே துப்பட்டா அது என்ன?
வானம்.

15.ஆயிரம் பேர் கூடி அழகாய் கட்டிய மண்டபம் ஒருவன் கண்பட்டு உடைந்ததாம் அது என்ன?
தேன் கூடு

16.ஆழக் குழி தோண்டி அதிலே ஒரு முட்டையிட்டு அண்ணாந்து பார்த்தால் தொண்ணூறு முட்டை அது என்ன?
தென்னை மரம்.

17.அள்ள முடியும் கிள்ள முடியாது அது என்ன ?
தண்ணீர்.

18.சுரங்கத்தில் பிறந்த என்னை சுற்றி இருப்பதோ மரப்பலகை நான் யார்?
பென்சில்.

19.ஊரெல்லாம் சுற்றினாலும் வீட்டு முலையிலே கிடப்பான் அவன் யார்?
செருப்பு.

20.குண்டுச் சட்டியில் கெண்டை மீன் அது என்ன?
வாய்.

21.மொட்டைத் தாத்தா தலையிலே இரட்டைப் பிளவு அது என்ன?
பனங்காய்

22.முகம் பார்த்து வளரும் முடிவில்லாமல் தொடரும் அது என்ன ?
நிழல்.

23.மணி அடித்தால் மலைப் பாம்பு நகரும் அது என்ன?
ரயில்

24.பிறக்கும் போது வால் உண்டு இறக்கும் போது வால் இல்லை அது என்ன?
தவளை

25.கடலில் கலந்து கரையிலே பிரிந்து தெருவிலே திரியும்பு எது?
உப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோரோனா விசாரணை: இன்று சீனா செல்லும் W.H.O நிபுணர் குழு

கொரோனா எப்படி எங்கு உருவானது என்பது பற்றி நேரடி விசாரணை நடத்துவதற்காக,உலக சுகாதார நிறுவனத்தின் நிபுணர்குழுதுன்று,14-ந்தேதி சீனாவுக்கு செல்ல இருப்பதாகWHOஅவசரகால இயக்குனர் மைக்கேல் ரியான் WHO emergencies director Michael Ryanதெரிவித்தார்,

அவர் மேலும் தெரிவிக்கையில் நீண்ட இழுபறிக்குப் பிறகு இறுதியாக சீனாவில் இருந்து பச்சை விளக்கு வழங்கப் பட்டிருக்கிறது .இந்த வாரம் சீனாவில் தொடங்கவிருக்கும் கோவிட் -19தொற்றுநோயின் தோற்றம் குறித்த சர்வதேச விசாரணை, ''யாரையாவது குற்றம் சாட்டுவதை'' கண்டறிவாவதற்காக அல்ல அது முற்று முழுதாக விஞ்ஞானத்தைப் பற்றியது,அரசியல் அல்ல. என்று உலக சுகாதார



அமைப்பு திங்களன்று வலியுறுத்தியது.


கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் சீனாவின் வுஹான் மாகாண ஆய்வுகூடம் ஒன்றிலிருந்து கொரோனா தொற்று பரவியதாக கருத்தப்பட்டும் அது குறித்து விசாரணை செய்ய ஒரு வருடத்திற்கு மேலாகியும் சீன விசாரணையைத் தடுக்க முயன்றது குற்றச்சாட்டுகளுக்கு மத்தியிலும்,புதிய கொரோனா வைரஸின் தோற்றம் குறித்து ஆராய பத்து சர்வதேச நிபுணர்கள் குழுவை சீனா விசாரணைக்கு அனுமதித்திருக்கிறது . இந்த குழு இம்மாதம்14 ந்திகதி சீனா சென்று தங்கள் விசாரணையை மேர்ட்கொள்ளும் என்று உலக சுகாதார அமைப்பு தெரிவித்தது .

ஜெனீவாவில் செய்தியாளர் கூட்டத்தில் WHO அவசரகால இயக்குனர் மைக்கேல் ரியான் கூறுகையில், ''நோயின் தோற்றத்தை அது எப்படி உருவானது என்பதை அறிந்து கொள்வதே இந்த விசாரணையின் முக்கியம் யாரையாவது குற்றம் சாட்டுவதைக் கண்டுபிடிப்பது அல்ல. இது விலங்கினத்திற்கும் மனித இனத்திற்குட்இடையிலான மிக முக்கியமான தொடர்பைப்பற்றி அதாவது இடைமுகத்தைப்பற்றி (Interface) பற்றிய அறிவியல் பதில்களைக் கண்டுபிடிப்பதாகும். ''அந்த இடைமுகத்தை நாங்கள் புரிந்துகொள்வது ஒரு இப்போதைய சூழ்நிலைக்கு முழுமையான தேவை.நாங்கள் இங்கே பதில்களைத் தேடுகிறோம்,குற்றவாளிகள் அல்ல . வைரஸ் முதன்முதலில் விலங்குகளிடமிருந்து மனிதர்களிடம் எவ்வாறுதாவியது என்ற மர்மத்தைத் தீர்ப்பது மற்றொரு தொற்றுநோயைத் தடுப்பதற்கு முக்கியமானது '' என்று நிபுணர் குழு கூறுகின்றனர்.

## உலக வலம்

சபா தயாபரன்
Sabathayaparan@gmail.com

# டொனால்ட்ட்ரம்ப் தனது அமெரிக்க அதிபர் பதவியை ராஜினாமா செய்தாரா?



அமெரிக்க அதிபர் டொனால்ட்ட்ரம்ப் தனது அமெரிக்க அதிபர்பதவியில் இருந்து ராஜினாமா செய்துள்ளதாகஅதிகாரப்பூர்வமற்ற தகவல் வெளியாகியுள்ளது அமெரிக்கா அரசியல்வட்டாரங்களில் பரபரப்பைஏற்படுத்தியுள்ளது. எனினும் இதன் உண்மைத்தன்மை இன்னும் நிரூபிக்கப் படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் நடைபெற்ற அமெரிக்கா அதிபர்தேர்தலில் ஜனநாயககட்சிவேட்பாளர் ஜோ பைடன் வெற்றிபெற்றார்.எனினும்ஜோபைடனின் வெற்றியை ஏற்றுக்கொள்ளாத ட்ரம்ப்அமெரிக்காஅதிபர் தேர்தலில் மிகப்பெரிய மோசடி நடைபெற்றதாக அடுக்கடுக்கான குற்றங்களை முன்வைத்தார். மேலும்,தேர்தல் முடிவை எதிர்த்து ட்ரம்ப் தரப்பில் பல்வேறு நீதிமன்றங்களில் டொனால்ட்ட்ரம்ப் வழக்கு தொடர்ந்தார். அதில் அனைத்துமே அவருக்கு தோல்வியே ஏற்பட்டது. இதனிடையே,அதிபர்தேர்தலில் ஜோபைடன் வெற்றிபெற்றுவிட்டதாகஅமெரிக்காகாங்கிரஸ் அதிகாரபூர்வமாக அங்கீகரித்தது.ஆனால்,ஜனவரி 20ஆம் தேதியன்று நடைபெறவிருக்கும் பதவியேற்புவிழாவில் நான்பங்கேற்கப்போவதில்லை எனட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

அதன் தொடர்ச்சியாக, அமெரிக்க அதிபராக தேர்வாகியுள்ள ஜோபைடனின் வெற்றியைஅங்கீகரிக்கும்வகையில்சான்றிதழ்அளிக்கும்நிகழ்ச்சிஅந் நாட்டுநாடாளுமன்றத்தில்நடைபெற்றது.அப்போது அங்கு திரண்டுவந்த டொனால்ட்ட்ரம்ப்பின்ஆதரவாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.அவர்களை நாடாளுமன்றத்துக்குள் நுழையவிடாமல் போலீஸார் தடுத்தபோது, இரு தரப்புக்கும் இடையே ஏற்பட்டமோதல் வன்முறையாகமாறியது. இதில் பல உயிரிழப்புகளும் ஏற்பட்டுள்ளன.

அமெரிக்கநாடாளு மன்றத்தில் நடைபெற்ற இந்தவன்முறைச்சம்பவங்களுக்கு உலகம் முழுவதும் இருந்து கண்டனக் குரல்கள் எழுந்து வருகின்றன.பல உலகத்தலைவர்கள் அமெரிக்க அதிபர் மீது நேரடியாகவேதங்கள் விமர்சனத்தை முன்வைத்தனர் அமெரிக்க பொதுமக்கள்,எதிர்க்கட்சிகள் மட்டுமல்லாமல் ட்ரம்பின் ஆதரவாளர்களில்பலர் இதனால் அதிருப்தியில் உள்ளனர். இந்த வன்முறையை தூண்ட முயற்சிப்பதாக குற்றம்சாட்டி டொனால்ட்ட்ரம்ப்பின் ட்விட்டர் பக்கத்தைட்விட்டர் நிர்வாகம் அதிரடியாகமுடக்கியது..

அமெரிக்க நாடாளுமன்றத்தில் நிகழ்ந்தவன் முறையை தொடர்ந்து,வெள்ளைமாளிகையில் டொனால்ட்ட்ரம்ப் நிர்வாகத்தின் கீழ்பணியாற்றும் அதிகாரிகள் சுமார்15 பேர்தங்களது பதவியை ராஜினாமா செய்துள்ளனர்.மேலும் ட்ரம்பும் அவரது பதவியை ராஜினாமா செய்யவேண்டும் என்றுபல்வேறுதரப்பினரும் வலியுறுத்திவருகின்றனர்.அதேசமயம் அமெரிக்கபிரதிநிதிகள் சபையில் உள்ள ஜனநாயகக்கட்சியினர் விரைவில் அமெரிக்கா அதிபர் ட்ரம்பிற்கு எதிராகஒருகுற்றச்சாட்டு அறிக்கையை சமர்ப்பிக்கஉள்ளதாக தெரியவருகின்றது. அந்த அறிக்கையில் அமெரிக்கா அரசாங்கத்திற்கு எதிராகவன்முறையைத்தூண்டுவதன் மூலம் உயர் குற்றங்கள் மற்றும் தவறான செயல்களில் ட்ரம்ப் ஈடுபடுவதாக அவர்மீது குற்றம்சாட்டப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அதேசமயம் அவரிடம் இருக்கும் அனுஆயுததாக்குதல் தொடர்பான அதிகாரம் குறித்தும் ராணுவ உயர்மட்டத்தில் பேசப்பட்டுள்ளது. இந்நடவடிக்கை எடுக்கப்படும் பட்சத்தில் எதிர்காலத்தில் மீண்டும் ட்ரம்ப் கூட்டாட்சி பதவிகளை வகிப்பதை இது தடுக்கலாம் என்று நிபுணர்கள் தெரிவித்தனர். ட்ரம்ப்குற்றச்சாட்டு அறிக்கை செனட்டிற்கு ஒரு விசாரணைக்கு அனுப்பப்படுவதற்குமுன்னர்சபையில்

பெரும்பான்மை வாக்கெடுப்பை நிறைவேற்ற வேண்டும்.இந்நடவடிக்கைக்கு ஜனாதிபதி குற்றவாளியாக்கி மற்றும் பதவியில் இருந்து நீக்க செனட்டில் மூன்றில் இரண்டுபங்கு ஆதரவு தேவைப்படுகிறது.

இந்நிலையில்,அமெரிக்க அதிபர் பதவியில் இருந்து டொனால்ட்ட்ரம்ப் ராஜினாமா செய்துள்ளதாக அதிகாரப்பூர் வமற்றதகவல்வெளியாகியுள்ளது.இந்ததகவல்அமெரிக்கஅரசியலில்சலசலப்பைஏற்படுத்தியுள்ளது,

இந்நிலையில்,வன்முறை நடைபெற்றபோது அங்கு பாதுகாப்புபணியில் இருந்த போலீஸ் அதிகாரிகளில் ஒருவரான51வயதான ஹாவர்டுலைபென்குட் என்பவர்தற் கொலைசெய்துகொண்டுள்ளார் என்று டைய்லி மெயில் செய்திவெளியிட்டுள்ளது.வன்முறை நடந்ததினத்தில் இருந்து அவர் மன உளைச்சலில் இருந்ததாகவும், அதன் காரணமாக அவர் தற்கொலைசெய்துகொண்டிருக்கலாம் என்றும் சந்தேகிக்கப்படுகிறது.

இருப்பினும்,அவரது உடலைகைப்பற்றியுள்ள போலீசார் தற்கொலைக்கான காரணம் குறித்து தீவிரமாக விசாரித்து வருகின்றனர். போலீஸ் அதிகாரி தற்கொலைசெய்து கொண்ட இந்த சம்பவம் அமெரிக்காவில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

## முடிவுக்கு வந்தது 3 ஆண்டுகால தடை; கத்தாரிலிருந்து சவுதிக்கு முதல் விமானம் புறப்பட்டது.!

கத்தாரில் இருந்து சவுதி அரேபியாவுக்கு முதல் நேரடி விமானம் 11.01.2021 திங்கட்கிழமை பிற்பகல் 2:05 மணிக்கு ஹமாத் சர்வதேச விமான நிலையத்திலிருந்து புறப்பட்டது. கத்தார் ஏர்வேஸ் கியூ 1164 ஆணிஞ்டிணஞ் 787-8 விமானம் சவுதி அரேபியாவின் ரியாத்தில் உள்ள கிங் ஹாலித் சர்வதேச விமான நிலையத்திற்கு புறப்பட்டு சென்றது.

கடந்த வாரம் கட்டார் சவூதி அரேபியா நாடுகளுக்கிடையில் ஏற்பட்ட புரிந்துணர்வையடுத்து இரு நாடுகளுக்குமிடையில் கடந்த மூன்று ஆண்டுகளாக தடைபட்டிருந்த வான்இ கடல் மற்றும் தரை வழி போக்குவரத்து பாதைகள் திறக்கப்பட்டுள்ளது.

இந்த நல்லெண்ண உடன் பாட்டின் காரணமாக கட்டார் நாட்டு மக்கள் மட்டுமின்றி இங்கு தொழில் நிமித்தம் வசிக்கும் பல நாட்டு மக்களும் தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தியுள்ளனர்.அத்துடன் இரு நாடுகளுக்குமிடையிலான பொருளாதார வர்த்தக நடவடிக்கைகள் தொடரும் சந்தர்ப்பத்தில் கட்டார் நாட்டில் இனி வரும் நாட்களில் தொழில் வாய்ப்புக்கள் அதிகரிப்பதற்கான வாய்ப்புக்கள் அதிகரித்திருப்பதாகவும் தெரிவிக்கப் படுகிறது.



## சுவிஸ் பொங்கல் விழா ஒத்திவைப்பு


இலங்கையின் கிழக்கு மாகாண மக்களை ஒன்றிணைத்து சுவிஸ் நாட்டில் வருடாந்தம் சுவிஸ் உதயம் அமைப்பின் ஏற்பாட்டில் நடைபெற்று வரும் ஊரும் உறவும் பொங்கல் விழா கொவிட் - 19 அச்சுறுத்தல் காரணமாக இம்முறை இடம்பெறாது என சுவிஸ் உதயம் அமைப்பினர் தெரிவித்தனர்.

எட்டாவது ஆண்டாக இவ் விழா எதிர்வரும் 17 ஆம் திகதி நடைபெற திட்டமிடப்பட்டிருந்தபோதும் கொவிட் 19 வைரஸ் காரணமாகவும் அரசாங்கத்தின் சட்டதிட்டங்களுக்குட்பட்டு இவ் விழா இடைநிறுத்தப்பட்டதாக நிருவாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

## புலம் பெயர் செய்திகள்

சுவிஸ் - இரா.விஜயகுமாரன் vije0113@Gmail.com
பிரான்ஸ்- க.முருகானந்தன். மா.தேவமனோகரன் kbabup@hotmail.fr
கனடா-என்.விஜயரெட்ணம். ப.பிறேம் viejay1@hotmail.com Preman167@gmail.com
ஜேர்மனி -இரா.நிர்மலதாசன் jeyadhas248@yahoo.de
டென்மார்க்- ந.நரேந்திரராஜா naren001@hotmail.com
இலண்டன் - க.பிரதீப் Nklp.theep@yahoo.com
மத்திய கிழக்கு - அ.ரவி. பா.மேனன் aravi069@gmail.com, jakan20130701@gmail.com

## கனேடிய நகரம் ஒன்றில் பரவும் ஒரு பழங்கால நோய்!



முதல் உலகப்போரின்போது, போர் வீரர்களுக்கிடையே பரவிய நோய் ஒன்று தற்போது கனேடிய நகரம் ஒன்றில் கண்டறியப்பட்டுள்ளது.

1915ஆம் ஆண்டு முதல் உலகப்போரின்போது அகழிகளில் மறைந்திருக்கும் போர்வீரர்களுக்கு சிலைப்பேன் என்னும் பூச்சி மூலம் பரவிய நோய் அகழிக்காய்ச்சல்.

அந்த நோய்க்கு பல மில்லியன் போர் வீரர்கள் பலியானார்கள். தற்போது அது Manitobaவில் வீடற்றோர் நான்கு பேருக்கு இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

Bartonella quintana என்ற கிருமியால் உருவாக்கப்படும் இந்த நோய், சிலைப்பேன்கள் மூலம் ஒருவரிடமிருந்து மற்றொருவருக்கு பரவுகிறது. மீண்டும் மீண்டும் வரும் காய்ச்சல், உடல் வலி, தலை வலி, உடலில் புள்ளிகள் முதலானவை இந்த நோய்க்கான அறிகுறிகள் ஆகும்.

கனடாவில் இதற்கு முன்பு 20 ஆண்டுகளுக்கு முன்புதான் இந்த அகழிக்காய்ச்சல் கண்டுபிடிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

முதல் உலகப்போரின்போது, போர் வீரர்களுக்கிடையே பரவிய நோய் ஒன்று தற்போது கனேடிய நகரம் ஒன்றில் கண்டறியப்பட்டுள்ளது.

1915ஆம் ஆண்டு முதல் உலகப்போரின்போது அகழிகளில் மறைந்திருக்கும் போர்வீரர்களுக்கு சிலைப்பேன் என்னும் பூச்சி மூலம் பரவிய நோய் அகழிக்காய்ச்சல்.


அந்த நோய்க்கு பல மில்லியன் போர் வீரர்கள் பலியானார்கள். தற்போது அது Manitobaவில் வீடற்றோர் நான்கு பேருக்கு இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

Bartonella quintana என்ற கிருமியால் உருவாக்கப்படும் இந்த நோய், சிலைப்பேன்கள் மூலம் ஒருவரிடமிருந்து மற்றொருவருக்கு பரவுகிறது. மீண்டும் மீண்டும் வரும் காய்ச்சல், உடல் வலி, தலை வலி, உடலில் புள்ளிகள் முதலானவை இந்த நோய்க்கான அறிகுறிகள் ஆகும்.

கனடாவில் இதற்கு முன்பு 20 ஆண்டுகளுக்கு முன்புதான் இந்த அகழிக்காய்ச்சல் கண்டுபிடிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது

## தமிழ் மொழியைக்காப்பதில் அதிக அக்கறைகாட்டும் யேர்மனியத் தமிழர்கள்

தமிழர்கள் புலம் பெயர்ந்து வாழும் நாடுகளில் தமிழ்மொழியைக் கற்பிப்பதிலும், தமிழ்மொழியைக் கற்பதிலும் மிகுந்த ஆர்வம் கொண்டுள்ளவர்களாக யேர்மனியத் தமிழர்கள் விளங்குகிறார்கள். தமிழர்கள் அதிகமாகப் புலம்பெயரத் தொடங்கிய 1980 காலப் பகுதியிலேயே தமிழ் ஆர்வலர்களால் இதையொட்டிய செயற்பாடுகள் முன்னெடுக்கப் பெற்றன. ஆனாலும் அவர்களின் செயற்பாடுகள் ஓர் ஒருங்கிணைக்கப்பட்ட நிறுவனக்கட்டுப்பாட்டின் கீழ் இயங்காத காரணத்தால், குறித்த இலக்கை அடைய முடியாமலே இருந்தன. காலப்போக்கில் யேர்மன் வாழ் தமிழ்க்குழந்தைகளுக்கான தமிழ்மொழியின் அவசியம் பற்றிய சிந்தனை பல தமிழ் ஆர்வலர்களிடையே அலசப்பெற்று, ஆராயப்பெற்றும் ஓர் ஆக்கபூர்வமான தீர்மானம் எடுக்கப்பெற்றது. இதன் பலனாக அனைத்துலக, யேர்மனியப் பொறுப்பாளர்களின் ஆலோசனைகளுடன் 1990 இல் உலகத் தமிழர் இயக்கம் பொன்(ஆணினை) நகரில் தொடங்கப் பெற்றது. உலகத் தமிழர் இயக்கத்தின் மேற்பார்வையில் யேர்மனியின் பல நகரங்களிலும் போட்டி போட்டுக் கொண்டு பல தமிழ்ப்பாடசாலைகள், தமிழாலயம் என்ற பெயரில் உருவாகின. 10 ஆண்டுகளில் யேர்மனியில் 103 தமிழாலயங்கள் உருவெடுத்திருந்தன. 15 வருடங்களில் 130





தமிழாலயங்கள் 6000 மாணவர்களுடன் வளர்ந்து நின்றது. ஒவ்வொரு தமிழாலயமும் நிர்வாகி, உதவி நிர்வாகி, பெற்றோர் பிரதிநிதி (சார்பாளர்) என்ற கட்டமைப்புடன், ஓர் ஒழுங்குமுறையுடனேயே நடாத்தப்பெறுகிறது. தமிழாலயத்தில் முதலாம் வகுப்பிலிருந்து 11ம் வகுப்பு வரையான பிரிவுகளில் அந்தந்த வகுப்புகளுக்கு ஏற்ப தமிழ்மொழியும், சமூக/சுற்றாடற் கல்வியும், தமிழர்களின் கலை, பண்பாடுகளும் கற்பிக்கப் பெறுகின்றன. ஒவ்வொரு வருடமும் பரீட்சைகளும் நடத்தப்பெற்று சான்றிதழ்களும் வழங்கப்படுகின்றன. இதனோடு தமிழ்த்திறன் போட்டியும் ஆண்டுதோறும் நடாத்தப்பெற்று சான்றிதழ்களும், பரிசுகளும் வழங்கப்பெறுகின்றன. தமிழ்த்திறன் போட்டியில் கட்டுரை எழுதுதல், மேடைப்பேச்சு என்பன நடைபெறுகின்றன.

தமிழாலயங்களில் கற்பிக்கும் ஆசிரியர்கள் எந்தவித ஊதியத்தையும் எதிர்பார்க்காமலேயே இந்தப் பணியைச் செய்கிறார்கள். அவர்களுக்கான பயிற்சிப்பட்டறைகளும் உலகத் தமிழர் இயக்கக் கல்விப்பணியகத்தினால் ஒழுங்கு செய்யப்பெற்று முறைக்குமுறை பயிற்சிகள் கொடுக்கப்பெறுகின்றன.

அத்துடன் தைப்பொங்கல், சரஸ்வதிப்பூசை, ஒளிவிழா போன்றவையும் கொண்டாடப்பட்டு பல ஜேர்மனிய பிரமுகர்கள் அழைக்கப்பட்டு எமது கலாச்சாரத்தையும், பண்பாடுகளையும், கலை நிகழ்ச்சிகளையும் நடாத்தி அவர்களை எம்முடன் ஐக்கியப்படுத்துவது குறிப்பிடத்தக்கது. நான் இருக்கும் நகரத்தில் நடாத்தப்படும் தமிழாலயத்தின் நுழைவாயிலில் ஒரு சிறு உண்டியல் வைக்கப்பட்டிருக்கும். அதில் சிறு துளியாக சேர்க்கப்படும் பணமும் ஈழத்தில் பல பாகங்களில் அடிப்படை வசதிகளற்ற பல மாணவர்களின் கல்வி மேம்பட உதவப்படுகிறது. குறிப்பாக இதில் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த இரு மாணவர்களும் அடங்குவர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# சர்வதேச கிரிக்கெட் போட்டியில் அதிவேகமாக ரன் ஓடக்கூடிய ஐந்து வீரர்கள்




மோ.கபிலன், செ.சிந்துஜன்
Kapilankapil1097@gmail.com , sinthunive@gmail.com

சர்வதேச கிரிக்கெட்டில் வேகம் எப்பொழுதும் முக்கியம் பந்தை பிடிக்கும் போதும்இ பந்தை வேகமாக வீசும் போதும்இ வேகம் எப்போதும் மிகப் பெரிய முக்கியத்துவம் தரும் அதிலும் ரன் ஓடும் பொழுது மிகவும் வேகமாக இருக்க வேண்டும். ஒரு ரன் எடுக்கும் இடத்தில் வேகத்தினால் 2 ரன் எடுத்தால் அது தான் கூடுதல் லாபம். அப்படி தற்போதைய கிரிக்கெட் உலகத்தில் இருக்கும் வேகமாக ஓடும் துடுப்பாட்ட வீரர்கள் பற்றி தற்போது பார்ப்போம்.

**கேன் வில்லியம்சன் :**



தற்போது நியூசிலாந்து அணியின் கேப்டனாக இருக்கும் இவர் உலகின் மிகச்சிறந்த முதல் 5 துடுப்பாட்டவீரர்களில் ஒருவராக இருக்கிறார் இவர். பவுண்டரிகள் அடிப்பதை விட ஒரு ரன் என்ற வேகமாக எடுத்து இருப்பதையே அதிகம் விரும்புவார். அந்த அளவில் வேகமாக ஓடக்கூடியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

**கெரோன் பொல்லார்ட் :**

ஐபிஎல் தொடர்களில் எந்த அளவிற்கு வேகமாக ஓடி வந்து கைப் பிடிக்கிறார் என்பதை நாம் பார்த்திருப்போம். அதே அளவிற்கு ஆடுகளத்தில் ரன் சேர்ப்பதிலும் இவர் கெட்டிக்காரர். எந்த அளவிற்கு சிக்சர் அடிப்பது விரும்புகிறாரோ அதை அளவிற்கு வேகமாக ஓடி இரண்டு ரன் சேர்ப்பதிலும் வல்லவர்.

**ரவீந்திர ஜடேஜா :**

இவரைப் பற்றி பெரிதாக சொல்ல தேவையில்லை. கடந்த 2019ஆம் ஆண்டு உலகக் கோப்பை தொடரில் பெரிதாக இவர் அணிக்குள் களமிறக்கபடவில்லை. ஆனால் இரண்டு போட்டிகளுக்கு மாற்று வீரராக களம் இறக்கப்பட்டார். அந்த இரண்டு போட்டிகளிலும் அருமையாக களத்தடுப்பு செய்து தனது வேகத்தினால் 45 ரன்களை களத்தடுப்பு மூலம் மட்டுமே கட்டுப்படுத்தி இருந்தார்



**டேவிட் வார்னர் :**


ஆஸ்திரேலிய அணியின் தொடக்க வீரரான இவர் இடதுகை துடுப்பாட்ட வீரர் . டெஸ்ட் போட்டிகளிலும் அதிரடியாக ஆடக்கூடிய இவர் அங்கு பவுண்டரிகள் அதிகமாக அடிப்பதை விட ரன்கள் ஓடி எடுப்பதையே அதிகம் விரும்பி இருக்கிறார்.



**விராட் கோலி :**

இந்திய அணியின் கேப்டனான இவர் உடல் தகுதியில் மிகவும் கவனம் செலுத்தக் கூடியவர். இவர் கேப்டனானதிலிருந்து இந்திய வீரர்கள் அனைவரும் இவரது பிட்னஸ் அளவில் இருக்க வேண்டும் என்று கடுமையான விதிகளை அமுல்படுத்தி இருக்கிறார். இவரும் சர்வதேச அளவில் கிரிக்கெட்டில் மிக அதிகமாக இயங்கக் கூடியவர் ஆவார்.

# வாட்ஸ்அப் பயனர்களுக்கு செக்




வாட்ஸ்அப் தனது தனியுரிமைக் கொள்கையை (privacy) மாற்றி அமைத்துள்ளது வாட்ஸ்அப். பயனாளிகளின் டேட்டா தகவல்கள் இனிமேல் ஃபேஸ்புக்குக்கு ஷேர் செய்யப்படும்.

ஃபேஸ்புக் நிறுவனம் கடந்த வருடம் வாட்ஸ் அப்பை வாங்கியது. இதன் பிறகு வாட்ஸ்அப்பில் பல்வேறு சேவைகள் புதிதாக கொண்டுவரப்படுகின்றன. வாட்ஸ்அப் மூலமாக பண பரிவர்த்தனை செய்யும் வசதியும் அறிமுகம் செய்யப்பட்டு உள்ளது.

இந்த நிலையில்தான் கடந்த செவ்வாய்க்கிழமை முதல் வாட்ஸ் அப் பயனாளர்களுக்கு ஒரு நோட்டிபிகேஷன் மெசேஜ் வருகிறது. வாட்ஸ் அப் செயலியை திறந்ததுமே அந்த மெசேஜ் உங்கள் கண்ணில் படும்.

இதில், ''WhatApp is updating its terms and privacy policy,'' என்ற வரிகள் இடம் பெற்றிருக்கும். நீங்கள் பின்னர் ஓகேதைச் செய்கிறேன் என்று கூறியிருந்தாலும் பிப்ரவரி மாதம் 8ம் தேதிக்குள் இதை நீங்கள் செய்தாக வேண்டும். அவ்வாறு ஓகே கொடுக்காவிட்டால் உங்களால் வாட்ஸ்அப் செயலியை பயன்படுத்த முடியாது.

அப்படி என்ன விஷயம் இதில் இருக்கிறது என்று கேட்கிறீர்களா? பேஸ்புக் நிறுவனத்துடன் வாட்ஸ்அப் பயனாளிகளின் தகவல்களை ஷேர் செய்து கொள்வதற்கு ஏற்பாடு செய்து கொண்டுதான் இதுபோல ஒரு காலக்கெடுவை நிர்ணயித்துள்ளது அந்த நிறுவனம். ஒருவரிடமிருந்து இன்னொருவருக்கு அனுப்பப்படும் மெசேஜ்கள் பாதுகாப்பானவை. பிறரால் படிக்க முடியாத encrypted செய்யப்பட்டவை என்பது தான் வாட்ஸ் அப் செயலியில் தனித்துவமாக இருந்தது. ஆனால் இதில் சமரசம் செய்து கொண்டு உள்ளது அந்த நிறுவனம்.

இப்போதும்கூட என்கிரிப்டட் வடிவில்தான் வாட்ஸ்அப் தகவல்கள், அவர்களின் சர்வர்களில் சேமித்து வைக்கப் படும் என்று கூறப்படுகிறது. ஆனால் ஒரு பயனாளர் எப்படி வாட்ஸ் அப்பை பயன்படுத்துகிறார், எவ்வளவு நேரம் பயன்படுத்துகிறார், அவர் அதை கால் செய்வதற்கு பயன்படுத்துகிறாரா, மெசேஜ் செய்வதற்கு அதிகம் பயன்படுத்துகிறாரா, ஸ்டேட்டஸ் வைப்பதற்கு அதிகம் பயன்படுத்துகிறாரா என்பது உள்ளிட்ட பல்வேறு தகவல்களை பதிவு செய்து வைக்கப்படுகிறது.

வாட்ஸ்அப்பின், மூன்றாம் தரப்பு சேவை நிறுவனங்களுக்கும் வாட்ஸ்அப் பயனாளிகளின் தகவல்கள் பகிரப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ஃபேஸ்புக் மற்றும் அதன் நிறுவனங்களான மெசேஞ்சர், இன்ஸ்டாகிராம் மற்றும் அதன் வெப்சைட் ஆகியவற்றுக்கு இப்படி தகவல் பரிமாற்றம் செய்யப்படும். இதன் மூலம் உங்களுக்கு சேவை மேம்படுத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம் இது அச்சப்படும் அளவுக்கு மோசமான மாற்றம் இல்லை என்று கூறுகிறார்கள். ஏற்கனவே இதில் இருக்கும் பல்வேறு தனியுரிமை கொள்கைகள் இப்போதும் தொடர்கின்றன. முன்பு மறைமுகமாக செய்ததை இப்போது அறிவித்துவிட்டு செய்யப்போகிறது வாட்ஸ்அப் என்கிறார்கள் தொழில்நுட்ப நிபுணர்கள்.

அதேநேரம் தனிமனித நடவடிக்கைகளை உளவு பார்த்து தேர்தல் உள்ளிட்ட நேரங்களில் அதை குறிப்பிட்ட தரப்புக்கு சாதகமாக மாற்றிக் கொடுப்பது பேஸ்புக் மீதான குற்றச்சாட்டு. இப்போது வாட்ஸ்அப் இது போல தனியுரிமை ரகசியங்களை பதிவு செய்யப்போவதாக கேட்கத் தொடங்கி உள்ளதால், பலரும் டெலிகிராம் உள்ளிட்ட வேறு மெசேஜ் செயலிகளை பயன்படுத்தப்போகிறோம் என்று சமூக வலைத்தளங்களில் தெரிவித்து வருகிறார்கள்.

தொழில்நுட்பம்

கோ.பிரசாந், செ.சுரேஸ்
prashafbb@gmail.com
Sellathuraisuresh3@gmail.com




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரணியில் தமிழர் வாழ்வில் பொங்குமா பொங்கல்?



பொங்கல் என்பது தமிழர்களால் பாரம்பரியமாக சிறப்பாகக் கொண்டாடப்படும் ஒரு தனிப்பெரும் விழா. நன்றியை பறைசாற்றும் மனித மேன்மைக்கு எடுத்துக் காட்டான தைப்பொங்கல் திருநாள் இன்று மலர்ந்திருக்கிறது. இப்பொங்கலாவது தரணியில் தமிழர் வாழ்வில் விடிவை ஏற்படுத்;துமா?

இவ்வாறு தனது பொங்கல் வாழ்த்துச்செய்தியில் காரைதீவு பிரதேசசபைத் தவிசாளரும் த.தே.கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட நம்பிக்கை நட்சத்திரமாக விளங்கும் கிருஸ்ணபிள்ளை ஜெயசிறில் ஆதங்கத்தை வெளியிட்டுள்ளார். அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

நாட்டில் கொரோனா தீநுண்மியின் தாக்கம் காரணமாக தைப்பொங்கல் பண்டிகை சற்றுக் களையிழக்கலாம். எனினும் பாரம்பரியமாக தமிழ்மக்கள் பண்டுதொட்டு கைக்கொண்டுவருகின்ற நடைமுறைகள் அனைத்தும் இலகுவில் பின்பற்றக்கூடியவை. எனவே பாரம்பரியத்தில் குறைவில்லாமல் அதேவேளை குதூகலமாக அனைவரும் இணைந்து சேர்;ந்து கொண்டாடஇயலாத சூழலில் கொண்டாடநேரிட்டுள்ளது.

கடந்த பல தசாப்தகாலமாக தமிழ் மக்கள் அனுபவித்த துன்ப துயரங்களுக்குத் தீர்வு காணும் வருடமாக இவ்வருடம் அமைய வேண்டும் என்பதுடன் பிறந்திருக்கும் தைத்திருநாளில் மக்கள் மனங்களில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் தொடர வேண்டும் என இறைவனைப் பிரார்த்திப்போம்.மக்கள் வாழ்வில் ஒளி பொங்க அல்லல் நீங்க இத்தைத்திருநாளில் இறைவனை வேண்டுவோம்.



## உறைந்து போன உழவர் திருநாள்

காலத்தை உணர்த்த வரும்
கதிரவனே எங்கு சென்றாய்
ஞாலத்து மாந்தர் அழும்
முகாரி கேட்கிலையோ காதுகளில்
பாவம் தான் என் செய்தார்
பார் வாழ் மாந்தரெல்லாம்
கார் சூழ்ந்த பெரு மேகம்
கடும் முழக்கம் பெருமழை
உழவர் திருநாள் வந்ததை
உணர முடியவில்லை இங்கு
கண் இருட்டி கை சேர்த்து
மெய் சோர்ந்து கருத்திழந்தோம்.
ஓர் ஆண்டாய் எம்மவர்
ஒன்று கூட முடியவில்லை
கொரோனா கொடு நோய்
கொன்றொழிக்க அலைகிறதே
இலட்சத்தை கடந்து உயிர்
உச்சமாய் மடிந்து ஒழிகிறதே
விஞ்ஞானம் தந்த விழைவோ
விட்டிலாய் தொடரும் உலையோ
வீட்டுக்குள் முடங்கியவர்
விடியலைத் தேடுகின்றனர்
தை பிறந்தால் வழி பிறக்கும்
தாரக மந்திரம்
தவிடு பொடியானதே

–பூவை சரவணன்–



# தமிழரின் பண்பாட்டியியல் அடையாளம் புதியீடு

தம்மை வாழவைக்கும் சூரியனுக்கு நன்றிப் பெருக்கோடு விழா வெடுத்து, பொங்கலிட்டுப் படைத்து அகமகிழ்வது தமிழர் பண்பாடு.

இதன் அடிப்படையிலேயே 'தை பிறந்தால் வழி பிறக்கும்' எனும் பெரும் நம்பிக்கையுடன், இயற்கைக்கு நன்றி தெரிவிக்கும் உழவர் திருநாளாம் தமிழர்களுக்கே உரித்தான தைத்திருநாளையும் இயல்பாகக் கொண்டாடி வருகின்றனர். தை மாதத்தின் பிறப்பை அறுவடைத் திருநாளாக பொங்கல் தினமாக உலகத் தமிழினம் கொண்டாடி வருகிறது.

பொங்கல் பண்டிகையின் தோற்றம் எப்போது என்று உறுதியாகத் தெரியவில்லை. 1000 ஆண்டுகளுக்கு முன்பு வந்தது இந்த பண்டிகை என்று ஒரு கூற்று உள்ளது. 2000 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே இது கொண்டாடப்படுகிறது என்று இன்னொரு கூற்றும் உள்ளது. சோழர் காலத்தில் பொங்கல் பண்டிகைக்கு புதியீடு என்று பெயர் இருந்தது.

அதாவது, ஆண்டின் முதல் அறுவடை என்று அதற்குப் பொருள். உழவர்கள் தை மாதத்தின் முதல் நாளில் அந்த ஆண்டின் முதல் அறுவடையை மேற்கொள்வது வழக்கமாக இருந்தது. இதுதான் பின்னர் பொங்கல் பண்டிகையாக மாறியது என்கிறார்கள்.

உலகில் தமிழர்கள் எங்கெல்லாம் வாழ்கின்றரோ அங்கெல்லாம் கொண்டாடப்படும் ஒரே பண்டிகையான இத்தைப்பொங்கல் பண்டிகையை இலங்கையில் உள்ள தமிழர்களும் நன்றி மறவாமல் விசேடமாக கொண்டாடி வருகின்றனர். அத்துடன் அரசினால் தேசிய தைப்பொங்கல் விழா பிரகடனப்படுத்தப்பட்டு கொண்டாடப்பட்டு வருகின்றமையும் சிறப்பானதாகும்.

பொங்கல் என்பது தமிழர்களால் சிறப்பாகக் கொண்டாடப்படும் ஒரு தனிப்பெரும் விழா. பொங்கல் உழைக்கும் மக்கள் இயற்கைக்கும், மற்ற உயிர்களுக்கும் சொல்லும் ஒரு நன்றியறிதலாகக் கொண்டாடப்படுகிறது.

பொங்கல் விழா மக்களால் இயல்பாகக் கொண்டாடப்படுகிறது. உழைக்கும் தமிழ் மக்கள் தாமே கண்டுணர்ந்து தமது உழைப்பிற்கு உதவிய இயற்கைக்கும் தம்மோடு சேர்ந்து உழைத்த கால்நடைகளுக்கும் தமது நன்றியையும் மகிழ்ச்சியையும் தெரிவிக்கும் விழா. உழவர்கள் மழையின் உதவியால் ஆடி மாதம் முதல் உழைத்துச் சேர்த்த நெல்லை மார்கழியில் வீட்டிற்குக் கொண்டு வந்து தமது உழைப்பின் பயனை நுகரத் தொடங்கும் நாளே தைப்பொங்கல்.

பொங்கல் பண்டிகை மொத்தம் 4 நாட்களுக்கு கொண்டாடப்படுகிறது.

முதல் நாள் போகி பண்டிகை. அடுத்த நாள் பொங்கலிடும் நாள். 3வது நாள் மாட்டுப் பொங்கல். பொங்கல் திருநாளின் முதல் நிகழ்வான போகி பண்டிகையன்று அதிகாலையில் அனைவரும் எழுந்து குளித்து வீட்டில் உள்ள தேவையற்ற பழைய பொருட்களை வீட்டின் முன்பு வைத்து தீயிட்டு கொளுத்துவார்கள். அல்லவை அழிந்து நல்லவை வரட்டும். பழையன கழிதலும் புதியன புகுதலும் என்ற மொழிக்கேற்ப போகி பண்டிகை கொண்டாடப்படுகிறது.

பொங்கல் விசேஷமானது. தை மாதப் பிறப்பு நாள் இது. சர்க்கரைப் பொங்கல் என்று இந்த பண்டிகைக்குப் பெயர். புதுப்பானை எடுத்து மஞ்சள் உள்ளிட்டவற்றை பானையைச் சுற்றிக் கட்டி புதுப் பாலில் புது அரிசியிட்டு வெல்லம் உள்ளிட்டவற்றைக் கலந்து பொங்கலிடுவார்கள். வீட்டுக்கு வெளியே சூரியன் இருக்கும் திசையை நோக்கி இந்த பொங்கலிடும் நிகழ்ச்சி நடைபெறும். அரிசி நன்கு சமைந்து பொங்கி வரும்போது குலவையிட்டும் பொங்கலோ பொங்கல் பொங்கும் மங்கலம் எங்கும் தங்குக என்ற குரலோடு பொங்கல் பானையை இறக்க வேண்டும். நன்கு பொங்கி வந்தால் அந்த ஆண்டு முழுவதும் நல்ல வளமும் நலமும் நிலவும் என்பது ஐதீகம். மாட்டுப் பொங்கல்.

மாட்டுப் பொங்கல். கிராமங்கள் தோறும் மாட்டுப் பொங்கதூ; விமரிசையாக கொண்டாடப்படும். மாடுகள் பசுக்களின் கொம்புகளுக்கு புது வர்ணம் பூச்சி நன்கு குளிப்பாட்டி அவற்றை அலங்காரம் செய்து மாட்டுப் பொங்கல் தினத்தின்போது படையலிட்டு வழிபாடு செய்வார்கள். பின்னர் மாடுகளுக்கு பொங்கலும் அளிக்கப்படும். ஆண்டெல்லாம் நமக்காக உழைக்கும் மாடுகளுக்கு நன்றி கூறும் தினமாக இது கொண்டாடப்படுகிறது. இன்றைய தினத்தின் போது மாடுகளுக்கு ஒரு வேலையும் தர மாட்டார்கள். கழுத்தில் புது மணி கட்டி, கொம்புகளை சீவி விட்டு சுதந்திரமாக திரிய விடுவார்கள். இந்த இடத்தில்தான் ஜல்லிக்கட்டு தோன்றியிருக்கிறது. மாட்டுப் பொங்கலின்போது கிராமங்கள் தோறும் ஜல்லிக்கட்டு நிகழ்ச்சிகள் நடைபெறுவது வழக்கம்.

காணும் பொங்கல்

நான்காவது நாள் காணும் பொங்கலாக கொண்டாடப்படுகிறது. அதாவது உற்றார் உறவினர் நண்பர்களைக் கண்டு வாழ்த்துக்களையும் இனிப்புகளையும் பரிமாறிக் கொள்ளும் நாளாக இது கொண்டாடப்படுகிறது. சுற்றுலாத் தலங்களுக்கும் பொழுதுபோக்குமிடங்களுக்கும் இந்த நாளில் போவது வழக்கம்.

தாங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திற்கும் பின்னால் பல ஆத்மார்த்தமான கருத்துகள் உள்ளன என்பதை இந்த உலகிற்குச் சொல்லும் உன்னதமான இந்துமத தத்துவங்களை அவர்கள் பின்பற்றுகின்றார்கள். இயற்கையையும் மனிதனையும் பிரிக்க முடியாது என உலகம் படைக்கப்பட்ட நாள் முதல் தமிழர்கள் நம்புகின்றார்கள்.

நமக்கு காலமெல்லாம் கை கொடுத்து உதவும் மழை சூரியன் விவசாயத்திற்குப் பயன்படும் கால்நடைகள் ஆகியவற்றுக்கு நன்றி கூறும் நல்வாய்ப்பாகவும் இந்தத் திருநாளை கொண்டாடுகின்றமை பிறருக்கு வியப்பையே தருகின்றது.

கடந்த பல வருடங்களாக தமிழ் மக்கள் அனுபவித்த துன்ப துயரங்களுக்குத் தீர்வு காணும் வருடமாக இவ்வருடம் அமைய வேண்டும் என்பதுடன் பிறந்திருக்கும் தைத்திருநாளில் மக்கள் மனங்களில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் தொடர வேண்டும் என இறைவனைப் பிரார்த்திப்போம்.மக்கள் வாழ்வில் ஒளி பொங்க, அல்லல் நீங்க இத்தைத்திருநாளில் இறைவனை வேண்டுவோம்.

விபுலமாமணி வி.ரி.சகாதேவராஜா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org